விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 25 செவ்வாய்க்கிழமை (10.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

ராம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமே

# ஐ.தே.கட்சியின் 15 எம்.பிக்கள்

# அரசுடன் விரைவில் இணைவர்!

## அமைச்சர் ராஜித நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் பேச்சுக்கள் இடம் பெற்றுவருவதாகவும் அவர் கூறினார். (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இராணுவத்தினரின் பயன்பாட்டில்

### இராணுவ ஊடகத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது கைப்பற்றப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் சிலவற்றை தாம் பயன்படுத்தி வருவதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஏனைய ஆயுதங்களில் சிலவற்றை விற்பனை செய்வதா அல்லது இராணுவத்தினரிடம் கையளிப்பதா என்பது குறித்து பாதுகாப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

## 'விலகப் போவதில்லை' பிரபா கணேசன் உறுதி

(கொழும்பு)

தான் அரசாங்கத்துடன் இணைந்தமை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எந்த வித மாற்றமும் இல்லை எனவும் தான் எதிர்க்கட்சியில் அமரப் போவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி வரிசையில் மீண்டும் அமர்வது குறித்து தனது கட்சியின் செயலாளரிடம் இருந்து தனக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன புலிகளின் பிரமுகர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தக் கோரி மனு?

### மனித நேய அமைப்புகள் உதவி

(கொழும்பு)

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அல்லது சரணடைந்த நிலையில் காணாமல் போயுள்ள விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிறை வைக்கப்பட்டிருந்தால் அல்லது மறைமுகமாக வைக்கப்பட்டிருந்தால் அவர்களை ஆஜர்படுத்துமாறு கோரி அடுத்த வாரம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாலகுமாரன் மற்றும் யோகி ஆகியோரின் மனைவிமாரை அமைச்சர் டியூ.குணசேகர சந்தித்திருந்தார். பாலகுமாரன் மற்றும் யோகி ஆகிய இருவரும் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக்கட்சியின் அழைப்பை ஜெனரல் சரத் பொன்சேகா நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியில் இணையுமாறு ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய விடுத்த பகிரங்க வேண்டுகோளை அவர் நிராகரிப்பதாக ஜ.தே.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் யாரும் தனிப்பட்ட ரீதியாக அணுகவில்லை எனவும் இது தொடர்பாக ஜெனரல் யோசிக்கவுமில்லை எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

இந்த அழைப்பு ஐ.தே.கவின் பிரதி தலைவர் கரு ஜெயசூரியாவால் மாத்திரம் விடுக்கப்பட்டது. இவ்வழைப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திலிருந்து வெளிவர பிரபா கணேசனுக்கு 14 நாள் கெடு

### ஜனநாயக மக்கள் முன்னணி எழுத்து மூலம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறி மீண்டும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனுக்கு 14 நாட்கள் கெடு வழங்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் மனோ கணேசனின் ஒப்புதலுடன் பொதுச்செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனுக்கு அதிகாரப் பூர்வமாக எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் (16ஆம் பக்கம் பார்க்க)



மாவை கந்தனின் தீர்த்தோற்சவத்தில் முருகப்பெருமான் திருவீதியுலா வருவதையும் பக்தர்கள் தீர்த்தமாடுவதையும் படங்களில்காணலாம்.

## எம்.பியாக்கக் கோரி ரணிலுடன் மனோ பேச்சு

(கொழும்பு)

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் எம்.பியாக அவரைநியமிக்க (16ஆம் பக்கம் பார்க்க)



அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட்டின் சேவைகள் யாழ் மக்களுக்கு, சுன்னாகம் கிளையில் 12.08.2010 முதல்

அபான்ஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிட்டட் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் நிதிக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட அபான்ஸ் குழுமத்தின் ஓர் அங்கமாகும்.

எமது சேவைகள்

★ நிலையான வைப்பு
★ சேமிப்பு வைப்பு
★ குத்தகை, வாடகைக் கொள்வனவு
★ தவணைக் கடன்
★ சொத்து வியாபாரம்
★ ஏனைய நிதிச் சேவைகள்

Abans FINANCE

(2107)

தொடர்புகளுக்கு : 160 1/1 & 1/2, கே, கே, எஸ் வீதி, சுன்னாகம். தொ.பே: 021 3207686 தொ.ந: 021 224 1124



# முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

**ஸ்ரீராம சாஸ்திரி**
**0775183681, 0775183109**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்**

**K.R.V.INN,**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் முன்பாக)

(2089)

*கைரேகை பார்க்கும் நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்*



# நீரிழிவு சிகிச்சையும் PHYSIOTHERAPY சிகிச்சையும்

- நீரிழிவு (DIABETIC) நோயாளர்களுக்கான வைத்தியம், உணவுக் கட்டுப்பாடு, உணவு வகைகள், நீரிழிவு சம்பந்தமான இலவச அறிவுரைகள்.
- நீரிழிவு நோயாளர்களுக்கு மிக முக்கிய இரத்தப் பரிசோதனைகள், தகுதியானவரினால் (MLT) குறைந்த கட்டணத்தில்.
- NONFAT ஆடைநீக்கிய பசுப்பால் முழு நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.
- பக்கவாத நோயினால் (STROK) பாதிக்கப்பட்டவர்களுக்கான PHYSIOTHERAPY வைத்தியம் WARDல் தங்கியிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- வயோதிபர்களுக்கான பராமரிப்பு (உணவு, வைத்திய ஆலோசனை என்பவற்றுடன்)

**கோபிசாந் கெல்த் சென்ரர்**

191, முதலாம் குறுக்கு வீதி, (வேம்படி மகளிர்கல்லூரிக்கு அருகே)
யாழ்ப்பாணம். (2130) T.P.: 0779850291


## சந்தேக நபர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு நகரில் வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகச் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கப் பகுதியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரியும் வெளிநாட்டவர் ஒருவர், அந்த நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரினால் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-3)


**22.07.2010 முதல்**

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


## வசாவிளான் வைரவர் ஆலய ஆடிப்பூர விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய ஆடிப்பூர உற்சவ விசேட பூஜைஎதிர் வரும்14 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

வழிபாடுகள் நடைபெறும் தருணத்தில் அன்றையதினம் ஆலய நிர்வாக சபையைத் தெரிவுசெய்வதற்கான பொதுக்கூட்டம் நடைபெறும் எனவும் அத்துடன் ஆலயத்தைச் சூழவுள்ள வீடுகளைப் பார்வையிட முடியும் எனவும் ஆலய பரிபாலன சபைத்தலைவர் மு. விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார்.

எனவே இந்த கோவில் பூஜை வழிபாடுகளில் பங்குபற்றி பொதுக் கூட்டத்திலும் சமுகமளித்து தங்களது வீடுகளையும் பார்வையிட இருப்பவர்கள் அன்றையதினம் காலை 9 மணிக்கு வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

இந்தக் கோயில் வழிபாட்டிலும் பொதுக் கூட்ட நிகழ்விலும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். உதயன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (ச)

## வன்னிப் பாடசாலைகளின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்ய நாமலிடம் கோரிக்கை

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டங்களில் பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கிவைப்பதற்காக நேற்று வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேற்படி வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

போரினால் பாதிப்படைந்தபாடசாலைகளை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

இதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படுவதன் மூலமே வன்னி மாணவர்களின் கல்வி நிலையை சீர்ப்படுத்த முடியும் என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் கேட்டுள்ளார்.

இதேவேளை நாளை நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவ் விஜயத்தின்போது யாழ்ப்பாண பாடசாலைகளின் நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர். (ச-5)


உ
சிவமயம்



யாழ் - நாயன்மார்கட்டு

அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள் ஆலயம்

# புதிய சப்பற வெள்ளோட்ட விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆடித்திங்கள் 25ம் நாள் (10.08.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு புதிய சப்பற வெள்ளோட்ட விழா நடைபெற பேய்ச்சி அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது.

நிகழ்ச்சிகள்

1. இறைவணக்கம்
2. மங்கள விளக்கேற்றல்
3. தலைமையுரை
4. ஆசியுரை
   சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக்குருக்கள் – ஆலய மகோற்சவகுரு
   சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் – ஆலய பிரதமகுரு
   சிற்பக்கலைஞர் கௌரவிப்பு
5. கலாபூஷணம் சு. இராசரத்தினம்
6. நன்றியுரை
7. இறைவணக்கம்.



சப்பற நிர்மாணிப்பு
கலாபூஷணம் சு.இராசரத்தினம்

சப்பற உபயம்
அமரர் திரு திருமதி க. வயிரமுத்து குடும்பத்தினர்.

அடியார்கள் அனைவரும் சப்பற வெள்ளோட்ட விழாவில் கலந்து சிறப்பித்து அன்னையின் அருளைப் பெறுவீர்களாக.

பரிபாலன, திருப்பணிச் சபை,
யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்மன் ஆலயம்
08.08.2010

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

# இன்று ஒரு தகவல்

## தைரியம்

ஒரு சின்னப்பையன் என்னைத்தேடி வந்தான். "மாமா, ஒரு கதை சொல்லுங்கள்" என்றான்.

"சொந்தமாக எதுவும் தெரியாதே" என்றேன்.

உங்களுக்கு சொந்தமாக எதுவும் தெரியாது என்று எங்களுக்கும் தெரியும் என்றான்.

இந்தப்பையன் அடிக்கடி என்னிடம் வந்து கதை கேட்டான். அதனால் என்னுடைய ரகசியமெல்லாம் அவனுக்கு அத்துப்படி.

அதனால் தான் அவ்வளவு தெளிவாகக் கூறிவிட்டான்.

"சரி, இப்ப என்ன செய்யலாம்?" என்றேன்.

"பழைய கதை எதையாவது சொல்லுங்களேன்" என்றான்.

"உனக்கு கிருஷ்ண தேவராயரைத் தெரியுமா?" என்றேன்.

"அவரிடம் நேரடியாகப் பழக்கமில்லை. ஆனால் அவரைப்பற்றி புத்தகத்தில் படித்திருக்கிறேன்" என்றான்.

"சரி, இவனிடம் மேற்கொண்டு பேச்சுக் கொடுத்தால் நம்மளை ஒரு மாதிரி ஆக்கி விடுவான் என்பதை யூகித்துக் கொண்டு அவனை உட்கார வைத்து... கடைசிவரை குறுக்கே பேசக்கூடாது என்று ஒரு நிபந்தனையையும் போட்டுவிட்டு அந்தக் கதையை சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு சமயம் கிருஷ்ணதேவராயரின் சமஸ்தானத்துக்கு ஒரு பெரிய வித்துவான் வந்து சேர்ந்தார்.

என்னோடு போட்டி போட இந்த ஊரில் யாராவது இருக்கிறார்களா? என்று சவால் விட்டார்.

அந்த ஊரில் இருந்த பெரிய பெரிய வித்துவான்களெல்லாம் நமக்கே வம்பு என்று நினைக்க ஆரம்பித்தார்கள். யாரும் அந்த ஆளுடன் போட்டி போடுவதற்குத் தயாராக இல்லை. எல்லோரும் நடுங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் ஒருத்தன் மட்டும் தைரியமாக முன்னுக்கு வந்தான். அது யாரென்றால் தெனாலிராமன். அந்த சமஸ்தானத்தில் விகடகவி அவன்.

"என்னை அனுப்புங்கள் போட்டிக்கு. நான் ஜெயித்துக் காட்டுகிறேன்" என்றான்.

"உனக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா?" என்று கேட்டார்கள்.

"தைரியம் மட்டும் தான் என்னிடம் இருக்கிறது. ஆனால் தைரியம் இருந்தால் அதிர்ஷ்டம் தேடிக் கொண்டு வருமென்பது எனக்குத் தெரியும்" என்றான்.

அடுத்த நாள் போட்டி ஆரம்பமானது. அந்தப் பெரிய வித்துவான் வந்து நின்றார். தெனாலிராமன் எதிரில் வந்து நின்றான். அந்த வித்துவான் ஒரு விரலைக் காட்டினார். தெனாலிராமன் இரண்டு விரலை நீட்டினான். வித்துவான் மூன்று விரலைக் காட்டினார். இவன் உடனே நான்கு விரலைக் காட்டினான். அவர் ஐந்து விரலை நீட்டினார். தெனாலிராமன் உடனே தன் கை முஷ்டியைக் காட்டினான். அவ்வளவு தான் அந்தப் பெரிய வித்துவான், கிருஷ்ண தேவராயர் காலில் விழுந்தார். நான் தோற்று விட்டேன், என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.

கிருஷ்ண தேவராயர் அவரைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் என்ன நடந்தது என்று விசாரித்தார். அந்த வித்துவான் விளக்கம் கொடுத்தார்.

ஆண்டவன் ஒருவன் தான் உண்டென்பதை விளக்குவதற்காக நான் ஒரு விரலைக் காட்டினேன். "அப்படியில்லை, சக்தியைச் சேர்த்தால் சக்தி – சிவன் என்று இரண்டுபேர் உண்டு" என்று உங்கள் வித்துவான் இரண்டு விரலைக்காட்டினார்.

"மூர்த்திகள் மூன்று பேர்" என்று நான் மூன்று விரலைக் காட்டினேன். "வேதங்கள் நான்கு" என்று அவர் நான்குவிரலைக் காட்டினார். "பஞ்ச பூதங்கள் ஐந்து" என்று நான் ஐந்துவிரலைக் காட்டினேன். "அதையெல்லாம் அடக்கி ஆளவேண்டும்" என்று சொல்லி அவர் முஷ்டியை காண்பித்தார்.

அடடா... உங்களுடைய வித்துவானுக்கு எப்பேற்பட்ட அறிவு? அவர்தான் ஜெயித்தார். நான் தோற்றுவிட்டேன். என்றார் அவர். அப்படிச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். அதன் பின் தெனாலிராமனைக் கூப்பிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். அதற்கு தெனாலிராமன் விளக்கம் கொடுத்தார்.

"என்னைக் கொன்றுவிடுவேன் என்று அந்த வித்துவான் ஒரு விரலைக் காட்டினார். உன் கண்ணிரண்டையும் தோண்டிவிடுவேன் என்று நான் இரண்டு விரலைக் காட்டினேன்.

"உனக்கு நாமம் போட்டுவிடுவேன்" என்று அவர் மூன்று விரலைக் காட்டினார். அதை அழித்து விடுவேன் என்று நான் நான்கு விரலைக் காட்டினேன்.

"உன்னை அறைந்து விடுவேன் என்று அவர் ஐந்து விரலைக் காட்டினார். 'நான் உங்களை குத்திவிடுவேன்' என்று முஷ்டியைக் காட்டினேன்" என்றான்.

இப்பொழுது பாருங்கள், ஜெயித்தது யார்?

தைரியம் மட்டும் இருந்துவிட்டால் அதிர்ஷ்டம் தானாகத் தேடிவரும் என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது.

அதனால் நாம் எப்பொழுதும் தைரியமாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு என் எதிரில் கதைகேட்டுக் கொண்டிருந்த சின்னப்பையனைப் பார்த்தேன்.

அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் தன்னுடைய கை–கால் இரண்டையும் ஒரு மாதிரியாக என்முன்னால் தூக்கி 20 விரலைக் காட்டினான். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

இதற்கு என்னப்பா அர்த்தம்? என்று கேட்டேன்.

இதேகதையை இதற்கு முன்னால் என்னிடம் 20 தடவை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று அர்த்தம் என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். நகர வர்த்தக நிலையங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி

## இன்று மேற்கொள்ளத் திட்டம்

யாழ்.குடாநாட்டில் டெங்கு நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்துமுகமாக யாழ். மாநகரசபையினரால் நேற்று யாழ். நகர வர்த்தக நிலையங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதான பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் நேற்று ஆடி அமாவாசை தினம் ஆகையால் இன்று இவ் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். வணிகர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சகல வர்த்தக நிலையங்களிலுமுள்ள உரிமையாளர்களும் ஊழியர்களும் ஒன்றிணைந்து இப்பணியினை மேற்கொள்ளுமாறும் தங்கள் நிலையங்களைச் சூழவுள்ள பகுதிகளில் காணப்படும் பற்றைகள் , பொலித்தீன் உறைகள் , குப்பை கூழங்களையும் டெங்கு நுளம்பு உருவாகும் என அடையாளம் காணப்படும் இடங்களைத் துப்புரவு செய்வதோடு கழிவுநீர் தேங்கி நிற்கும் வாய்க்காலில் நீர் வழிந்தோடி செல்லக் கூடியவாறு துப்புரவு செய்யும் படியும் கேட்கப்படுகின்றனர்.

அன்றைய தினம் யாழ். மாநகர சபையினரின் வாகனங்கள் இக்கழிவு பொருட்களை எடுத்துச் செல்வதற்காக இப்பகுதிக்கு வர இருப்பதால் சேரும் கழிவுகளை உரப்பையினுள் இட்டு தங்கள் வணிக நிலையங்களிற்கு முன்னால் வைப்பதன் மூலம் , அவர்கள் அதனை அப்புறப்படுத்துவதற்கு இலகுவாக இருக்குமெனவும் , அவர்களின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

மேலும் அடுத்து வரும் சில நாட்களில் டெங்கு ஒழிப்பு பிரிவினர் யாழ். வர்த்தக நிலையங்களை பார்வையிட இருப்பதால் , உடனடியாக சகல குப்பை கூழங்களையும் அகற்றி உங்கள் சுற்றாடலையும் , கடையையும் டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுத்தத்தைப் பேணும்படி யாழ். வணிகர் கழகத் தலைவர் சகல வர்த்தக உரிமையாளர்களிடமும் கேட்டுக் கொள்கிறார். (6-2)

# 2012 இல் நாட்டின் சகல வீதிகளுக்கும் மின்சாரம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அனைத்து வீதிகளுக்கும் மின்சாரத்தை வழங்கும் திட்டம் 2012 ஆம் ஆண்டளவில் நிறைவுக்கு வரும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தேசிய மின்சார நுகர்வுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை ஈரானின் உதவித் திட்டத்தின் கீழ் கிரா மங்களுக்கு மின்சாரத்தை வழங் கும் 4 ஆயிரத்து 600 திட்டங்கள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட் டன. 2 வருடங்களுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்கும் நாடுகளில் இலங்கையும் இணைந்துள்ளமை உண்மையான வெற்றியினை எடுத்துக் காட்டுவதாகும் என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். (6-4)

# மன்.மாவட்டத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட . ஆயுர்வேத வைத்தியசாலை கடந்த 5 ஆம் திகதி வடமாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலை என்னும் இடத்தில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அப்பிரதேச பங்குத் தந்தை, கிராம உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் வவுனியா சென்று ஆயுர்வேத மருத்துவ சேவையைப் பெற்று வந்த இப்பிரதேச மக்கள் இனி வரும் காலங்களில் இவ் வைத்தியசாலையில் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் முறிவு நோவுக்குரிய வைத்திய சேவையும் இங்கு வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது என வடமாகாண சுதேச மருத்துவத்திட்டமிடற் பிரிவு மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் எஸ். குமுதினி அறிவித்துள்ளார்.(6-2)

# இராசி பலன்

*10.08.2010*
*(ஆடி 25, செவ்வாய்க்கிழமை)*
*அமாவாசை முற்பகல் 9.13 மணிவரை*
*ஆயிலியம் முன்னிரவு 8.54 மணிவரை*
*இராகுகாலம் 3.04-4.34 மணிவரை*
*சுபநேரம் 10.34-12.04 மணிவரை*
*செல்வச்சந்நிதி முருகன் கொடி,*
*நான்காம் ஆடிச் செவ்வாய்.*

**மேடம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள் , அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் நாள் , எதிர்பார்த்த தொகை வந்து சேரும்.

**இடபம்** தொலைபேசி மூலம் மனதிற்கினிய செய்தி ஒன்று வந்து சேரும் , சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர் , வழக்குகள் சாதகமாக அமையும்.

**மிதுனம்** உத்தியோக அனுகூலமுண்டு , நாவன்மையால் நல்ல பெயர் எடுக்கும் நாள் , கடினமான வேலைகளைக் கூடி இலகுவாக செய்து முடிப்பீர்கள் , வெளியூர் தொடர்பு நன்மையைத் தரும்.

**கடகம்** நண்பர்களின் ஆலோசனைப்படி நடந்து நன்மதிப்பை பெறுவீர்கள் , இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.

**சிங்கம்** வேலைச்சுமை அதிகரிக்கும் , காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும் , மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும் , நீங்கள் நினைத்த ஒருவர் உரிமைகளைத் தேடி வரலாம் , ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள்.

**துலாம்** சொல்லைச் செயலாக்கிக் காட்டும் நாள் , தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும் , குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழல் அமையும்.

**விருச்சிகம்** எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் பலனளிக்கும் , வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள் , பிரயாணத்தின் மூலம் நன்மையடையலாம்.

**தனுசு** கடவுள் வழிபாட்டின் மூலம் காரியத்தை தொடங்க வேண்டிய நாள் , எதையும் பலமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது , எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.


**மகரம்** நண்பர்களை சந்திக்கும் நாள் , மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம் , அடிப்படை வசதி வாய்ப்புக்களை தேடிக் கொள்வீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள் , மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறலாம் , குடும்பத்துடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் குறைவடையும்.

**மீனம்** பிள்ளைகள் வழியில் மங்கலகரமான நிகழ்வுகள் நடைபெறலாம் , வெளிநாட்டு தொடர்புகள் அனுகூலம் தரும் , பாராட்டும் , புகழும் கிடைக்கும்.

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 110 |
| தக்காளி | 70 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 130 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 120 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 25-30 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 |



தென்மராட்சி கிழக்கு அரிமாக்கழகத்தினால் கொடிகாமம் கிருஷ்ணா கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான கருத்தரங்கும் கல்விப் பயிற்சிப் பரீட்சையும்யா/திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆங்கில ஆசிரியர் க.தவ யோகராஜா கருத்தரங்கை நடத்துவதையும் மாவட்டம் 306 B1 இன் ஆளுநர் லயன் எஸ். வக்சலன் NJF கல்வி நிறுவன ஆசிரியர் யோ.லிங்கேஸ்வரனிடம் வினாப்பத்திரங்களை கையளிப்பதையும் அருகில் தென்மராட்சி கிழக்கு அரிமாக்கழக தலைவர் லயன் எஸ். தேவகுமார் நிற்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்

# பனம் பொருள் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பனம் பொருள் உற்பத்திகளை மேற் கொள் வதற்கும் பனம் தொழில் வல்லுனர் களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவ தற்கும் சீவல் தொழிலாளர்களின் பிள்ளை களது எதிர்காலத்தினை மேம்படுத்துவதற் குமான பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினரும் தீவக பிரதேச செய லக ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்துறை பனை, தென்னை அபி விருத்தி சங்க கூட்டத்தில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஊர்காவற்றுறை பனை, தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தின் தேவைகளை கேட்டறிந்ததுடன் மிகவிரை வில் அனுமதிகள் கிடைக்கப்பெறாத கிளைக ளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளூடாக அனு மதியினைப் பெற்றுத் தருவதோடு ஊர்காவற் றுறை ப.தெ.அபிவிருத்தி கூட்டுறவு சங்கத் தினால் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையத்திற் கான புதிய அங்கத்தவர்கள் சேவை நிலை யத்தினூடாக அத்தியவசியப் பொருட்களை கடனாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிவில் தொழிலாளர்கள் பல சமூ கப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதனை தான் அறிந்துள்ளதாகவும் இவற்றை தீர்ப் பதற்கு முழுமூச்சோடு தான் செயற்படுவதாக வும் அவர் உறுதியளித்தார். (6-4)

யாழ்.செய்திகள்

# கலைத்திறன் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம் பக் கல்வி மன்றம் நடாத்தும் கலைத்திறன் விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் ஆரம்பக் கல்வி மன்றத் தல்லவர் நெ.மு.அஸ்ஹர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய கல் வியியற் கல்லூரிப் பீடாதிபதி கே.பேர்னாட்டும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசியுரையை கலாசாலை அதி பர் வே.கா.கணபதிப்பிள்ளையும் வாழ்த்துரை களை பிரதி அதிபர் கலாநிதி செ.திருநாவுக் கரசு, ஆரம்பக் கல்வி மன்றக் காப்பாளர் க.விக் னேஸ்வரி ஆகியோர் வழங்குவர். ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (6-4)

# வயோதிபப் பெண்ணின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு ஓடைக்கிராமத்தில் சுமார் 75 வயது மதிக்கத்தக்க வயோதிபக் கைம் பெண் ஒருவரின் 3 பவுண் தங்கச் சங்கிலி யை திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது,

தனிமையில் வீட்டில் நண்பகல் வேளை யில் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் திடீரென வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் இப்பெண்ணின் வாயைப் பொத்தி, பயமுறுத்தி கழுத்தில் அணிந்திருந்த சங் கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவந்த அயலவர் கள் பெண்ணை பார்க்கச் சென்ற போது, அவர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டதா கவும் பின்னர் அயலவர்களின் உதவியோடு குறித்த பெண் மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை யின் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு ஆங் கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆங் கில பாட செயலமர்வு நாளை புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை காலை 8 மணிக்கு தென் மராட்சி கல்வி வலய அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடை பெறும். (6-2-29)

# ஆடிப்பூரத் திருவிழா

(சாவகச்சேரி)

கச்சாய் வடக்கு கொடிகாமம் அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலய ஆடிப்பூர திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமா கவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6 - 2 - 29)

# வடமராட்சி கிழக்கு மக்கள் விரைவில் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படுவர்

## யாழ். அரச அதிபர் உறுதியளிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களை விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி அன்று குடத்தனைப் பகுதியிலுள்ள மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்ட யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகு மார் அங்குள்ள அரச உத்தியோகத்தர் மற் றும் கிராம அலுவலர்களுடன் இடம் பெற்ற சந்திப்பின் போதே இந்த தகவலை வெளியிட் டுள்ளார்.

மேலும் அவர் தகவல் தெரிவிக்கையில் வடமராட்சி கிழக்கு பகுதி மக்களின் துன்பங் களை நான் நன்றாக அறிந்து கொண்டுள் ளேன் எனவே அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் இம்மக்களை சொந்த இடங்களில் மீள குடியமர்த்த நடவடிக்கை எடுப் பேன் எனவும் யாழ். மாவட்டத்தில் முதலாவ தாக இடம் பெறப் போகும் மீள் குடியமர்வு வட மராட்சி வலயத்தின் மீள் குடியமர்வாக இருக்கும் எனவும் யாழ்.அரச அதிபர் நம் பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு மக்க ளின் மீள் குடியமர்வு தொடர்பாக வடமராட்சி இடம் பெயர்ந்தோர் நலன் பேணும் அபி விருத்தி அமைப்பானது யாழ். அரச அதிபருக் கும், மீள் குடியமர்வு அமைச்சுக்கும் மீள் குடியமர்வு தொடர்பில் ஏற்கனவே கடிதங் களை அனுப்பி வைத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இம்மக்கள் மீள் குடியமர்வு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அரச தரப்பினரிடம் வலியுறுத்தி வருகின்றமை யும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. (6-2-43)

# போட்டிகள் நல்ல விழுமியங்களை சிதைத்து விடாது பார்த்துக்கொள்ள வேண்டும்

## இலங்கை திருச்சபை குருமுதல்வர் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

இன்று நாம் போட்டிகள் நிறைந்த சமூ கத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போட்டிகள் நல்ல விழுமியங்களை சிதைத்து விடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை சுண்டிக் குளி புனித பரியோவான் ஆரம்ப பாடசாலை கலை நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை திருச்சபை குரு முதல்வர் என்.நேசகுமார் அடி கள் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளி சிறார்களின் ஒரு விளை யாட்டு நிகழ்வை அண்மையில் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஓட்டப்போட்டி நிகழ்வில் முதலாவதாகச் சென்ற சிறுமி பின் னால் வருபவர்களை விரைவாக வருமாறு அழைத்துக் கொண்டு சென்றாள். குழந் தைக ளின் நிலை இவ்வாறாக இருக்கிறது.

ஆனால் பெரியவர்களின் நிலை வேறாக இருக்கிறது. இன்று நாம் போட்டிகள் நிறைந்த சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போட்டிகள் நல்ல விழுமியங்களை சிதைத்து விடாது பார்த்துக்கொள்ள வேண்டும் என் றார். (6-51)

# யாழ். பொதுசன நூலகத்தில் ஆங்கில கற்கை நெறி மீண்டும் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ். பொதுசன நூலகத்தில் நடைமுறை யில் உள்ள டைஎட் (DAYAD) ஆங்கில கற் கை நெறி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இணைய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கற்பிக்கப் பட்டு வருகின்றது.

சிறிது காலம் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக தடைப்பட்டிருந்ததாகவும் இக் கற்கை நெறிக்கு மணித்தியாலத்திற்கு 20ரூபா அறவிடப்படுவதோடு மட்டக்களப்பை தலைமையகமாகக் கொண்டுள்ள இந் நிறு வனத்தினால் இக் கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

இக்கற்கை நெறியை கற்க விரும்புவர் கள் யாழ். பொது நூலகத்தின் கணணிப்பிரி வுடன் தொடர்பு கொள்ளுமாறு தற்போது இணையத்தள கோவைக்காக மணித்தியா லத்திற்கு முப்பது ரூபா அறவிடப்படுவதா கவும் யாழ்.பொதுநூலகர் எஸ். தனபாலசிங் கம் தெரிவித்துள்ளார். (6-4-51)

# நீங்கா நினைவுகளுடன் நெஞ்சைவிட்டகலா
# விண்ணக வாழ்வின்
# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**மண்ணில்**

14

05

1937

**விண்ணில்**

11

07

2010

மரியாம்பிள்ளை என்னும்
மங்கல நாமம் கொண்டு
மண்ணகம் துறந்து
விண்ணகம் சென்ற தகப்பனே...!
விம்முகின்றோம் உங்கள் பிரிவை எண்ணி

குருகுல பூமி குருநகர் மண்ணில்
மாஸ்ரர் என்ற நாமம் கொண்டு
குதூகலம் கொண்ட குடும்பத்தை ஆண்ட
குணாளனே – எம்
குல தெய்வமே – அப்பா...!

அன்பு முத்தம் தந்து
ஆசை மொழி பேசி
அனைவருக்கும் கையசைத்து
ஆர்வமுடன் புறப்பட்டீர்

கொழும்பு செல்லும் வழியில் – உம்மை
எமதர்மன் எதிர் கொண்டான்
விபத்து என்னும் பெயரில்
வீதி வந்து வழிமறித்தான்
ஒரு வார்த்தை கூடப் பேச முன்னர் – உங்கள்;
உயிர் மூச்சை அடக்கிவிட்டான்

அப்பா உங்கள் வரவை எண்ணி
அன்பு மகள் காத்திருக்க – நீங்கள்
அனைவரையும் தவிக்க விட்டு
ஆண்டவனிடம் சென்றீரோ...?

ஆண்டவன் அழைப்போ – இல்லை
உம் மகன் அழைத்தானோ .... இதை
அறியாத்துயரில் உம்மவள் அந்தோனியம்மா
ஆறாத்துயரில் உம் பிள்ளைகளும்.... அப்பா..!

எழுபத்தி மூன்று ஆண்டுகளை
முந்திக் கடந்த உங்களை
முந்தல் நகர் காலன்
முடித்துவிட்டான் நொடிப் பொழுதில்

கள்ளமில்லா உம் சிரிப்பால்
காண்பவரைக் கவர்ந்த கள்ளழகா
கடை நொடி நேரம் வரை – உங்கள்
கலை எழில் மாறவில்லையே – அப்பா

பாசத்தின் பிறப்பிடமே – எங்கள்
அன்பின் உறைவிடமே – அப்பா....!
அழுகின்றோம், புலம்புகின்றோம் – உங்கள்
அன்புக்காய் ஏங்குகின்றோம்.

இறப்பின் பின் யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்
பணித்தவன் பாதம் கண்டு – நீங்கள்
பரகதி சென்று இளைப்பாறிட நாம்
பரமனை வேண்டுகின்றோம்.

## "ஆண்டவர் தம் இல்லத்தில் ஊழியுள்ள காலமும் நான் இருப்பேன்"

# அமரர் ELS மரியாம்பிள்ளை
(பிரபல குத்தகையாளர், குருநகர்)

இரக்கமுள்ள நித்திய இறைவா இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியாரும் எமக்குப் பிரியமான வருமான எங்கள் அன்பு அப்பா

அமரர் ELS மரியாம்பிள்ளை

எனும் அடியானின் ஆன்மாவை பாவக் கட்டுக்களில் இருந்து விடுதலையாகி "இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்" என்ற திருவசனத்தை அக்களிப்போடு கேட்கும் மகனாக மாற்றி எங்களுடைய அன்பான அப்பாவிற்கு நித்திய வாழ்வை அளித்தருள உம்மை கெஞ்சி இரந்து மன்றாடுகின்றோம். எங்கள் நல்ல தகப்பனை

ஆமென் ஆமென் ஆமென்

அன்னாரின் ஆத்மசாந்தித் திருப்பலிகள் 10.08.2010 இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்திலும், Sacred Heart Church Hall, Edgehill Road, wimbledon sw 19 4Lu. Tuesday 7.00 p.m U.K லும் ஒப்புக் கொடுக்கப்படும். ஆத்மசாந்தித் திருப்பலியில் கலந்து கொண்டு அடியாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக் குமாறு அன்புடன் அழைக்கிறோம். எமது அன்புத் தெய்வத்தின் மரணத்தில் எம்முடன் தோளோடு தோள் நின்று எமக்கு ஆறுதல் வழங்கி எமக்கு சகல விதத்திலும்உதவிக்கரம் நீட்டி உதவிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல 01, 2ம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
TP.00442082242722

49, Nonsuch walk,
Cheam sm2,
7 LG.

(2122)

# ஆடி மாதத்தில் பிறந்தவரா நீங்கள்?

ஒரு குழந்தை ஆடி மாதத்தில் பிறந்து விட்டால் 'ஆஹா ஆடி மாதத்தில் குழந்தை பிறந்து விட்டதே', என்று அங்கலாய்ப்பது வழக்கம். ஆனால் ஆடி மாதத்தில் பிறந்த எத்தனையோ பேர் இன்று கோடீஸ்வரராகவும், குவலயம் போற்றுபவர்களாகவும் வாழ்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நவக்கிரகங்கள் தான் காரணமாக விளங்குகின்றன.

'நாள் செய்வதை நல்லவன் செய்யமாட்டான்', 'கோள் செய்வதை கொடுப்பவன் செய்யமாட்டான்' என்பது பழமொழி. அப்படிப்பட்ட கோள்களில் ராஜகிரகம் என்று வர்ணிக்கப்படும் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கும் காலம் தான் ஆடி மாதமாகும்.

இந்த மாதத்தில் ஆண்குழந்தை பிறந்து விட்டால் பெற்றோர்களை ஆட்டி வைக்கும் என்று பழமொழி சொல்வார்கள்.

பெற்றோர்கள் செல்வ வளத்தோடும், செல்வாக்கு விருத்தியோடும் இருக்கும் நேரத்தில் ஆடி மாதத்தில் ஒரு குழந்தை பிறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் பிறகு அவர்களுக்குத் தொழிலில் இழப்புக்கள் ஏற்பட்டால், தங்கள் சுய ஜாதகத்தின் தெசாபுத்திப் பலன்கள் தான் என்பதை உணர்ந்து கொள்ளாமல், பிறந்த குழந்தை மீது குற்றத்தைச் சுமத்துவது வழக்கம்.

ஆடி மாதத்தில் ஆண்குழந்தை பிறந்தாலும், பெண் குழந்தை பிறந்தாலும் அதனால் தோஷம் வருமோ என்று கவலைப்படுபவர்கள் இனி கவலைப்படத் தேவையில்லை. தேடிப்பிடித்து தெய்வத்தை வழிபட்டால் ஆடியில் பிறந்தவர்களுக்கும் அதிர்ஷ்டம் வந்து சேரும். ஜெனன ஜாதக அமைப்பினை பொருத்து அதிலுள்ள லக்னாதிபதி மற்றும் இராசிநாதனின் பலத்தை ஆராய்ந்து யோக பலம் பெற்ற நாளில் அதற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் பெற்றோர்களுக்கும் பெருமை சேரும். பிரச்சினைகள் இல்லாமல் தொழிலிலும் இலாபம் வந்து சேரும். பிள்ளைகளும் கல்வியில் சிறந்து விளகுவர்.

பொதுவாக ஆடி மாதத்தில் பிறந்த பலர் மேதைகளாகவும், தலைசிறந்த அறிஞர்களாகவும் விளங்குவர். பிடிவாத குணத்தை மட்டும் இவர்கள் தளர்த்திக் கொண்டால் பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை அமையும்.

பெற்றோர்களின் சொற்களைக் கேட்டு நடவாமல் ஆடி, ஓடிக் கொண்டு திரிபவர்களாகவும் 'சுட்டிப் பிள்ளை' என்று இளம் பருவத்திலே பட்டம் பெற்றவர்களாகவும் விளங்குவர். எதையும் ஒரு முறை பார்த்தால் அதை மனதில் பதித்து வைத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு மூளை பலம் அதிகம் உண்டு.

வழக்குகள் எத்தனை வந்தாலும் கடைசியில் வெற்றி இவர்களுக்குத்தான். இவர்களது சுறுசுறுப்பு மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும். அவசரக்காரர்களைப் போல தோற்றம் அளித்தாலும், எதையும் ஆலோசித்து முடிவெடுப்பர். எதிர்ப்புக்களைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. வாழ்வில் சுகத்தை மட்டும் தான் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவர்.

துக்கத்தையும், தூக்கத்தையும் ஒதுக்கி விடுவர். பக்கத்தில் இருப்பவர்களுடன் பளிச் சென்று பேசிக் காரியங்களை முடித்துக் கொண்டு வருவர். திருமண விடயத்தில் பெற்றோர்களின் சொல்லிற்கு கட்டுப்படுவார்களா? என்பது சந்தேகம் தான்.

இவர்களிடம் வாக் குக் கொடுத்தவர்கள் அதை நிறைவேற்றாமல் தப்பிக்கமுடியாது. பணம் சம்பாதிக்கும் திறமை இவர்களிடம் இருப்பதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்கள்.

கட்டடத் தொழில் விற்பனை நிலையம், மளிகை மற்றும் பதப்படுத்தாத உணவுப் பொருள் வணிகம், தண்ணீர் வஸ்துகள் வியாபாரம், நூல், துணி விற்பனை நிலையங்கள், ஆயத்த ஆடையகம், மின்சாரம் மற்றும் திரையரங்கத் துறைகளைத் தேர்ந்தெடுத்து தொழில் செய்தவர்கள் வளர்ச்சியும், வருமானமும் காண்பர்.

ஜலதோஷம் மற்றும் கண்நோய் பாதிப்புகளுக்கு ஆளாக நேரிடலாம் .வாயுப் பதார்த்தங்களை சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. ஆவணி, கார்த்திகை, தை ஆகிய மாதங்களில் பிறந்தவர்களை மணந்து கொண்டால் எதிர்காலம் இனிமையாக இருக்கும். குரு ஓரையில் சாந்தி முகூர்த்தங்களை வைத்துக் கொண்டால் நல்ல பிள்ளைகள் பிறக்கும்.

ஆடியில் பிறந்தவர்களாக இருந்தாலும், ஆடி மாதத்தில் உங்கள் குழந்தைகள் பிறந்திருந்தாலும் ஜாதக ரீதியாக தேர்ந்தெடுத்த ஆலயங்களைத் தேடிச் சென்று வழிபட்டால் கோடி கோடியாய் நன்மை கிடைக்கும்.

## எங்கள் தேசிய முன்னணி கட்சியின் ஆலோசகராக சந்திரிகா தெரிவு?



எங்கள் தேசிய முன்னணி என்ற கட்சியின் ஆலோசகர் பதவிக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட மங்கள சமரவீரவினால் எங்கள் தேசிய முன்னணி கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. மங்கள சமரவீர உள்ளிட்ட கட்சியின் 21 முக்கியஸ்தர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டதனை அடுத்து எங்கள் தேசிய முன்னணியின் தலைவியாக உபுலாங்கனி மாலகமுவ தெரிவு செய்யப்பட்டுள்ளார்

இதுவரை காலமும் கட்சியின் பொதுச் செயலாளராக உபுலாங்கனி மாலகமுவ செயற்பட்டு வந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தேசிய அமைப்பாளரான ருவான் பேர்டினான்டஸ் கட்சியின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையாது தொடர்ந்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு தமது கட்சி எதிர்ப்பை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக எங்கள் தேசிய முன்னணி கட்சி அறிவித்துள்ளது. எனினும் குறித்த கட்சியின் ஆலோசகர் பதவியை ஏற்றுக் கொண்டதாக சந்திரிகா பண்டாரநாயக்க எவ்வித அறிவிப்பினையும் மேற்கொள்ளவில்லை. (2-6)

## யுத்தம் நிறைவுற்ற போதும் சமாதானத்தின் பலன்கள் மக்களுக்கு கிட்டவில்லை

### ஐ.தே.க.பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் சமாதானத்தின் பலன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடு ஆட்சி மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் மங்கள சமரவீர ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமை வரவேற்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுறுத்தியமை தொடர்பில் அரசாங்கத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கும் அதேவேளை மக்களுக்கு சமாதானத்தின் நலன்களை அடையமுடியாத நிலை வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் வாழ்க்கைச் செலவினை குறைக்கமுடியும் என அரசாங்கம் அறிவித்த போதிலும் இதுவரையில் அது நடைமுறைப்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

20 வீதத்திற்கும் அதிகமான சிறுவர், சிறுமியர் குறை போசாக்கினால் அவதியுறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுமக்களின் சுதந்திரம் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தை விமர்சனம் செய்வதற்கு மக்கள் அஞ்சுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவேற்கும் நோக்கில் மாத்தறையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (6-2)

## இளைஞர், யுவதிகளுக்கான அலுமினியப்பயிற்சி நெறி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராஞ்சிக் கிராமத்தில் அலுமினியப் பயிற்சி நெறி நடைபெறுகின்றது.

பூநகரிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இருபது இளைஞர்களுக்கு இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கிராமிய அபிவிருத்திப் பிரிவினர் இந் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பிரதேச செயலகப் பகுதிக்கு அப்பகுதி மக்கள் மீளக் குடியேறிய பின் மேற்கொள்ளப்படும் முதலாவது பயிற்சித்திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சீனாவுக்கு விஜயம்

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். மூன்று தினங்கள் அவர் சீனாவில் தங்கியிருப்பார் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகிறது.

இதன் போது சீன வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட உயரதிகாரிகள் சிலரைச் சந்தித்து அவர் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சு தெரிவிக்கிறது. சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் அந்த நாட்டு வர்த்தகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளார். (6-2)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 9 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீள் குடியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி பிரதேச செயலக பிரிவில் கடந்த 4ஆம் திகதி மீள் குடியேற்றம் இடம்பெற்றது.

நலன்புரி முகாம்களுக்கு வெளியில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த மக்கள் ஆனந்தபுரம், உதயநகர் கிழக்கு, உயதநகர் மேற்கு ,விவேகானந்த நகர், தொண்டமான் நகர், செல்வா நகர், உருத்திரபுரம் உட்பட ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளில் இவ்வாறு மீள் குடியேற்றப்பட்டுள் ளனர்.

முன்னதாக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் வைத்து கிராம அலுவலர்களாலும் படை அதிகாரிகளா லும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, குடும்ப ரீதியாக புகைப்படம் எடுக்கப்பட்டு, அதன் பின்பு படையினரால் சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு மீளக்குடியேறியோருக்கு உலர் உணவு அட்டை மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் அட்டை என்பன உடனடியாக கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டது.

அதேவேளை படை அதிகாரிகளால் பதிவு இலக்கங்களும் வழங்கப்பட்டன. எதிர்வரும் 12ஆம் திகதியும் கரைச்சிப்பிரதேச செயலகப் பிரிவில் கிளிநொச்சி நகர் கிராம சேவையாளர் பிரிவு உட்பட பல கிராம அலுவலர் பிரிவுகளில் மீள் குடியேற்றம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இம் மாத முடிவிற்குள் கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் பல இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)





We felicitate our Alma Mater
Holy Family Convent, Jaffna
on being declared as a
National School
on 05th August 2010.
Our sincere wishes to the Principal, Staff and Students to continue to excel in all spheres.

Past Pupils' Association
Holy Family Convent, Jaffna

(2121)

# எம்மிடத்திலேயே உள்ள "உயிர் காக்கும் உன்னத மருந்து"




"உன்னை யார் இரத்தம் கொடுக்க சொன்னது?.. இனிமேல் கொடுத்தால் உனக்கு இனி பட்டினி தான்... ஓடுகாலி" என்று மகனிடம் ஆர்ப்பரிக்கும் ஓர் தாய்!

இரத்த தானம் செய்தால் ரொம்ப பருத்து விடுவேன் என்று தயங்கும் பள்ளி மாணவி!

ஐயோ சரியா வலிக்குமே என்று பின்னடிக்கும் இளம் வாலிபன்!

இவை ஒன்றும் எங்கோதிரைப்படத்தில் வரும் கதை வசனம் அல்ல, இரத்தவங்கியின் நடமாடும் சேவையில் அறியாமையால் தெரிவிக்கப்படும் நொண்டிச் சமாதானங்களில் சில இது இவ்வாறிருக்க.

ஐயோ என் பிள்ளை இரத்தம் இல்லாமையால் அநியாயமாக சாகக்கிடக்கின்றதே.. யாருமே இரத்தம் கொடுக்க இல்லையா என்று கதறும் அபலைத்தாய்...

வீட்டில் இருபிள்ளைகள் விளையாட ஒரு மழலையை எதிர்பார்த்திருக்க பிரசவித்து விட்டு குருதிப்பெருக்கால் மூவரையும் அனாதைகளாக்கி மரணித்த கர்ப்பிணிப் பெண்....

இந்த அவலச்சாவுகளுக்கு என்ன காரணம்? மருந்து கண்டறியப்படாத நோயா? அல்லது கைக்கெட்டாத மருந்துவ வசதியா? இல்லை விதியா? இவை எவையுமில்லை இலகுவாய் கிடைக்ககூடிய இரத்தமே இதற்கு காரணம்.

இந்த இரத்த பற்றாக்குறையால் பாதிக்கப்படுவதும் எமது சமுதாயம் தான், பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கூடியதும் எமது சமூகம் தான்.

இரத்தவங்கி ஒரு கருவியே. எனினும் மக்களிடையே இரத்த தானம் தொடர்பான விழிப்புணர்வையும், அறியாமையையும், ஐயங்களையும் நீக்குவது மற்றும் இரத்த தான நிகழ்வுகள் தொடர்பான விபரங்கள் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்துவது இரத்த வங்கியின் தார்மீக பொறுப்பாகும்.

எனவே இக்குறிக்கோளை அடையும் முகமாக இக்கட்டுரை இங்கு பிரசுரம் ஆகின்றது.

நம்மிடம் இருப்பதை எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் இல்லாதோர்க்கு கொடுத்து உதவும் செயலை தானம் என்கிறோம்.

பசியைப் போக்கின் அன்னதானம் பார்வை கொடுப்பின் கண் தானம். ஆனால் ஒருவருக்கு உயிரையேக் கொடுக்கலாம் ஒரு தானத்தின் மூலமாக. ஆனால் அதற்காக நாம் நமது உயிரையெல்லாம் கொடுக்க வேண்டாம், இரத்தத்தில் சிறு பகுதியை கொடுத்தால் போதும். இதனால் தான் தானங்களிலே சிறந்ததாக இரத்த தானம் திகழ்கின்றது.


### இரத்த தானம் ஏன் முக்கியமானது?

இரத்தத்திற்கு செயற்கை மாற்றீடுகள் இது வரை அறியப்பட வில்லை.

### இரத்த தானம் கடினமான ஒன்றா?

18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் இரத்த தானம் செய்யலாம். ஆனால் இரத்த தானம் அளிக்க விரும்புவோரது உடல் எடை 50 கிலோவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

நல்ல ஆரோக்கியமாக இருக்கும் எந்த நபரும் இரத்த தானம் செய்யலாம். இரத்த தானம் செய்வதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. 4 மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே இரத்த தானம் செய்ய முடியும்.



சாதாரண எடையுள்ள ஒவ்வொரு மனித உடம்பிலும் ஐந்து முதல் ஆறு லீற்றர் இரத்தம் இருக்கும். அதில் இருந்து வெறும் 350 முதல் 450 மில்லி லீற்றர் இரத்தம் மட்டுமே இரத்ததானத்தின் போது எடுக்கப்படும்.

தானமாக அளித்த இரத்த அளவை நமது உடல் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் மீண்டும் உற்பத்தி செய்துவிடும்.

இரத்த தானத்தின் போது நாம் இழக்கும் சிவப்பணுக்களின் எண்ணிக்கை 56 நாட்களிலேயே சீராகிவிடும்.

இரத்த தானம் அளித்த பின்பு விசேட வகையான உணவுகளையோ, மருந்தையோ உண்ணத்தேவையில்லை. உணவுக்கட்டுப்பாட்டையும் பின்பற்றத் தேவையில்லை

இரத்த தானம் செய்வதற்கு முன்பு கொடையாளிக்கு தனக்கு இரத்த சோகை, இரத்த அழுத்தம் போன்ற எந்த நோயும் இல்லை என்பது பரிசோதிக்கப்படும்.

இரத்த தானம் செய்யும் நேரத்தில் எந்த போதைப் பொருளுக்கும் அடிமையாக இருக்கக் கூடாது, குடித்திருக்கவும் கூடாது.

இரத்த தானம் செய்ய விரும்புவர்களுக்கு சர்க்கரை நோய், காசநோய் இருக்கக் கூடாது.

எய்ட்ஸ் போன்று இரத்தத்தின் மூலம் பரவக் கூடிய நோய்கள் இருக்கக் கூடாது.

### இரத்த தானம் செய்வதற்கு..

20-30 நிமிடங்கள் போதுமானது.

காலை/மதிய உணவு உட்கொண்டிருக்க வேண்டும்.

### எங்கு இரத்த தானம் செய்யலாம்?

யாழ் வைத்திய சாலை இரத்த வங்கியில் அல்லது நடமாடும் இரத்ததான முகாம்கள் (பத்திரிகை மூலமாக அறியலாம்)

### யாரெல்லாம் இரத்த தானம் அளிக்க கூடாது...

கர்ப்பமாக இருப்பவர்கள் அல்லது சமீபத்தில் கருக் கலைப்பு ஆனவர்கள் தொடர்ச்சியாக மருந்து எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில்இருப்பவர்கள். போதைப் பொருள் பழக்கம் அல்லது பலரிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள்.

வரும் காலத்தில்அறுவை சிகிச்சை மேற் கொள்ள இருப்பவர். இதய நோய், சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்கள், நுரையீரல் பழுதடைந்த வர்கள், இரத்த அழுத்தம், போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர் கள் இரத்த தானம் அளிக்க இயலாது.

### இரத்த தானத் தினால் பாதிப்பு உண்டா?




இரத்த தானம் அளிப் பதால் நமது உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. சொல்லப் போனால் நமது உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். அது உடலுக்கு நன்மையாகத்தான் அமையும்.

இறைவன் உயிர் காக்கும் உன்னத மருந்தை எம்மிடத்திலேயே தந்திருக்கின்றான். பிறர் உயிர் காக்க இன்றே இரத்த தானம் செய்யுங்கள்.

குழுமமாக இரத்த தானம் செய்ய விரும்புவோர் (அமைப்புகள், விளையாட்டு கழகங்கள், நிறுவனங்கள்...) தெரியப்படுத்தும் பட்சத்தில் நடமாடும் சேவை அவர்கள் விரும்பும் இடத்தில் நடாத்தப்படும்.

தொடர்பு

*021 222 3063, email - bloodbankjaffna@gmail.com*

தபால் மூலமாகவெனின் கீழ் காணும் விபரங்களுடன் இம்முகவரிக்கு அனுப்பவும். பொறுப்பதிகாரி, வடபிராந்திய வைத்திய நிலையம், யாழ் போதனா வைத்தியசாலை.

அமைப்பின் பெயர் ...............

ஒழுங்குபடுத்துனரின் பெயர் ............

தொடர்பு.....................

காலம், நேரம், இடம் ..............

Dr.S. சிந்துஜா,
பொறுப்பதிகாரி, வடபிராந்திய வைத்திய நிலையம், யாழ்.
போதனா வைத்தியசாலை.

# இளைஞர் சேவைகள் அதிகாரிகளுக்கான வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

## அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

இளைஞர் சேவைகள் அதிகாரிகள் 140 பேருக்கு நாடளாவிய ரீதியில் வெற்றிடம் காணப்படுவதாகவும் அவை வெகு விரைவில் பூரணப்படுத்தப்பட விருப்பதாகவும் இளைஞர் விவகாரப் பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிராமமட்டத்திலுள்ள இளைஞர் அமைப்புக்களில் திறமை காட்டும் இளைஞர் , யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் இது தொடர்பாக கூடிய விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளது.

இளைஞர் சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடமுள்ள காரணத்தால் இளைஞர் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்கள் மற்றும் குறைபாடுகள் நிலவுகின்றது. (6-2)

# போக்குவரத்து அமைச்சிற்கெதிராக வழக்கு தொடர்வதற்கு தீர்மானம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சிற்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்பு பஸ் போக்கு வரத்து அனுமதி தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வித வெளிப்படைத் தன்மையும் இன்றி போக்குவரத்து அமைச்சு யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் போக்குவரத்தில் ஈடுபடுவோருக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

பகிரங்க விலை மனுக்கோரல் விடுக்கப்பட்ட போதிலும் அதற்கு புறம்பான வகையிலும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் காரணிகளின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தி விரைவில் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (6-2)

# கொழும்பில் பாடசாலை விடுதியொன்றில் தங்கியிருந்த 20 மாணவர்களுக்கு டெங்கு

(கொழும்பு)

கொழும்பு நகரில் இயங்கி வரும் பிரதான பாடசாலை ஒன்றின் விடுதியில் தங்கியுள்ள 20 மாணவர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி பிரதீப் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் தமது சொந்த இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் பாடசாலை விடுதிகளில் தங்கி கல்வி கற்று வந்ததால் விடுதிச் சூழலிலேயே இவர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டிருக்க கூடும் எனவும் இதனையடுத்து பாடசாலையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது பாடசாலையின் பல இடங்களில் தண்ணீர் நிரம்பிய இடங்கள் கண்டறியப்பட்டதாகவும் வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து பாடசாலை சூழலில் இரசாயனங்கள் தெளிக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டதாகவும் பிரதீப் காரியவசம் மேலும் கூறியுள்ளார். (6-2)

# சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் விசேட நிகழ்வில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை ''திருவாசகத்தேன்'' எனும் தலைப்பில் ஆசிரியர் கே.கைலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (2-35)

# தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கானசம்பளம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமையாற்றி , தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஆவணி மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-2)

# பிரகீத் எக்னெலிய கொட கடத்தப்பட்டு இன்றுடன் 200 நாட்கள் பூர்த்தி

## சத்தியாக்கிரகம் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிய கொட கடத்தப்பட்டு 200 நாட்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு இன்று மாலை 3.00 மணிக்கு சத்தியாக்கிரகம் மற்றும் கருத்தரங்கொன்றை ஊடக அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

மாலை 3.00 மணிக்கு கொழும்பு விஹார மகாதேவி மைதானத்தில் சத்தியாக்கிரகமும் மாலை 4.00 மணிக்கு பொது நூலகத்தில் கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதியன்று ஊடகவியலாளர் எக்னெலியகொட கடத்தப்பட்டு இன்றுடன் 200 நாட்கள் பூர்த்தியடைகின்றது. இந்நிகழ்வை இலங்கை உழைக்கும் பத் திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக ,இயக்கம் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு இலங்கை கிளை ,ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கம், ஊடகத்துறை ஊழியர் சங்கம் மற்றும் ஊடக அடக்குமுறைக்கு எதிரான ஊடகவியலாளர்கள் போன்ற அமைப்புக்கள் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (6-2)

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி தயார்

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் மீள் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அரசியல் தீர்வு ஒன்றையும் அரசாங்கம் வழங்கும் என்று பாராளுமன்ற சபை முதல்வரும் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும் என்பதே அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறிய அமைச்சர் சில்வா அதனை வழங்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஜனாதிபதி இது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறார் தனி ஈழத்தைத் தருவதற்கு எவரும் இணங்க மாட்டார்கள்.

ஆனால்,தமிழ் மக்களுக்கு தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஜனாதிபதியும் அதற்கு தயாராக இருக்கிறார் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

முதலில் அகதிகளை மீளக்குடியமர்த்தி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு என்றும் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க்கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போது அரசாங்க குழுவிற்கு தலைமை தாங்கியவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய மேம்பாடு தொடர்பாக அமைச்சர் கூறுகையில்,

வடக்கு –கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தி வருகிறேன். கடந்த வாரம் பிரதியமைச்சர் விநாயாக மூர்த்தி முரளிதரனுடன் கிழக்கிற்கு விஜயத்தை மேற்கொண்டேன்.

புலிகளின் பிடியில் அப்போது இருந்த பல குளங்களைப் பார்வையிட்டேன். அந்தக் குளங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வடமாகாணத்திலும் ,அம்பாறையிலும் பயங்கரவாத பிரச்சினைகளால் சேதமடைந்த குளங்களின் புனர் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அம்பதன் ஓயா திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 90 வீதம் நிறைவடைந்துள்ளன. அதன் பின்னர் மேலும் 10 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய இயலும். மொறகாகந்தா,கறுவாகந்தூர போன்ற திட்டங்களின் மூலம் இருபது ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் விவ சாயம் செய்யக்கூடியதாக இருக்கும் என்றார். (6-2)

# இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு கைவிட்டுவிட்டது

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டது. இதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவிப்பதாக இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் தேசிய செயலாளர் ராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தேனியில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இலங்கை இராணுவத்தினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைத் தடுக்க மத்திய அரசு தவறி விட்டது. நாளை நடைபெறும் மாநிலங்களவை கூட்டத்தில் இந்திய மீனவர்கள் பாதுகாப்பு குறித்து கடுமையாக பேசப்படும்.

அதேபோல இலங்கை தமிழர் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதை உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் பார்க்கக்கூடாது.

தமிழகத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாக வந்ததற்கு காரணம் இலங்கையில் தமிழர்கள் மீது நடைபெற்ற போராட்டத்திற்கு இந்திய அரசு இராணுவத்தை தார்மீக ரீதியாக ஆதரவு வழங்கியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவும் இதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்திய அரசு என்பது காங்கிரஸ் கட்சி மட்டும் அல்ல. தி.மு.க. வும் கூட்டணியில் உள்ளது. இலங்கைப் போரில் மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளது. இதை ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கூட அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டது. இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. (6-2)

# 10.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- கிமு 612 - அசிரியப் பேரரசன் சின்சரிஷ்கன் கொல்லப்பட்டான்.
- 0610 - முகம்மது நபி குர்ஆனைப் பெற்ற நாள். இது இஸ்லாமில், “லாய்லாட் ஐ-காதர்” நாள் எனப்படுகிறது.
- 0955 - புனித ரோமப் பேரரசன் முதலாம் ஒட்டோ மகியார்களைத் தோற்கடித்து 50 ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தான்.
- 1519 - மகலனின் ஐந்து கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவில் நகரில் இருந்து புறப்பட்டன.
- 1675 - ரோயல் கிறீனிச் வானாய்வகத்துக்கான அடிக்கல் லண்டனில் நாட்டப்பட்டது.
- 1680 - நியூ மெக்சிகோவில் ஸ்பானிய குடியேறிகளுக்கெதிராக புவெப்லோக்களின் எழுச்சி ஆரம்பமானது.
- 1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி இயுஸ்ட்டாச்சியஸ் டி லனோய் என்பவனைச் சிறைப்பிடித்தார்.
- 1776 - அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.
- 1809 - குவிட்டோ (தற்போதைய ஈக்குவாடோரின் தலைநகர்) பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1821 - மிசூரி ஐக்கிய அமெரிக்காவின் 24வது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் மிசூரியின் தென்மேற்குப் பகுதியில் கூட்டணிப் படைகளை வென்றனர்.
- 1904 - ரஷ்யப் படைகளுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையில் மஞ்சள் கடலில் கடற்போர் இடம்பெற்றது.
- 1913 - பால்கான் போர்கள்: பல்கேரியா, ருமேனியா, செர்பியா, மொண்டெனேகுரோ, கிரேக்கம் ஆகிய நாடுகள் புக்கரெஸ்ட் நகரில் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாமில் நிலை கொண்டிருந்த கடைசி ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1948 - ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் (Atomic Energy Commission) ஆரம்பித்து வைத்தார்.
- 1990 - மகெலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
- 2000 - உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது (www.ibiblio.org தரவின் படி)
- 2003 - யூரி மலென்சென்கோ விண்வெளியில் திருமணம் புரிந்த முதலாவது மனிதர்.
- 2006 - திருகோணமலையில் சேருவிலப் பகுதியில் தொடர்ச்சியான குண்டு வீச்சினால் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1894 - வி.வி.கிரி 4வது இந்திய ஜனாதிபதி (இ.1980)

## இறப்புகள்

- 1790 - பிலிப்பு தெ மெல்லோ, தமிழ் டச்சு அறிஞர் (பி. 1723)
- 1899 - சி.தியாகர் நல்லூரரைச் சேர்ந்த தமிழறிஞர்
- 1980 - யாஹயா கான், பாகிஸ்தான் ஜனாதிபதி (பி. 1917)

**792 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ் அரண் மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனனைக் கைது செய்தனர்.**



# சேவைநலன் பாராட்டும் இன்முக வரவேற்பும்



திருமதி. இமெல்டா சுகுமார்



திரு. நாகலிங்கம் வேதநாயகம்

அம்மாவின் அன்பாலே
அரவணைத்த நிர்வாகம்
ஆண்டுகள் எட்டு இங்கே
அல்லல் பல போக்கினீரே

கடலன்னை கருணை இன்றி
எமை கரைத்த போதும்
கண் கலங்கி நின்ற மக்கள்
துயர் துடைத்தீர் நீரே

கொடிய யுத்த காலத்திலும்
மக்கள் துயர் தீர்க்க
துணிச்சலுடன் செயல்பட்ட
செயல்வீரர் நீங்கள்

கால நேர வேளை இன்றி
கண் உறக்கம் மறந்த நீங்கள்
காட்டி நின்ற பாதைதனில்
கண்ணியமாய் சேவை செய்வோம்

முல்லை மண் தான் இங்கே
மின்னொளி பரப்பி நின்ற
முதல் நாள் தனில் இங்கு
ஒளிமயமாய் வருகைதந்த உங்களை நாம்
வரவேற்று நிற்கின்றோம் – இரு
கரம் கூப்பி அழைக்கின்றோம்

சோகங்கள் பல சுமந்து
சோதனைகள் மீது வாழும் – இம்
மாவட்ட மக்களின் நலத்தினை
மேம்படுத்தி நல்நிலைக்கு உயர்த்திடுவீர்

உயர்வான பொருளியலும்
நிலைத்து நிற்கும் அபிவிருத்தி
சுகமான சுக வாழ்வும் சேர்த்து
எங்கள் வேதனைகள் போக்கி
சாதனைகள் பல படைத்து வாழ்வாங்கு
வாழ்ந்துயர வாழ்த்தி நிற்கும்

முல்லைத்தீவு மாவட்ட மக்களும்
மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களும்

# சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள் 2



### 500 ஆண்டு பொற்காலம்

கி.பி.650 காலப்பகுதி தொடங்கி, 550 ஆண்டு காலம் தமிழ்மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை அளப்பரிய சிறப்புடைய சைவப் பனுவல்களும், சிற்றிலக்கியங்களும், பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்காலச் சோழர்களின் எழுச்சியும், நால்வர் பெருமக்களின் வருகையும், சைவம் வழித் தமிழ்மொழிக்கு விலைமதிப்பற்ற ஆபரணங்களை அணிவிக்கக் காரணமாயின. பாலி மொழியை முன்வைத்துத் தமிழை அழிக்க முயன்று பௌத்தர்களின் முயற்சியையும், வடமொழியை முன்வைத்துத் தமிழர் உயர் கலைகளைச் சீரழிக்க முயன்ற சமணர் முயற்சிகளையும் எதிர்த்துப் பெரும் சமயப் போராட்டம் நிகழ்த்திய சைவர்கள், வெற்றிவாகை சூடி, தமிழ் அன்னைக்கு அரியணை தந்தனர். ''நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன்', "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன்" என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ்வளர்த்த திறம் உரைத்தன.

### சைவத் திருமுறைகள்

மூவர் தேவாரம், சங்க காலத்தில் நிலவிப் பின் அழிவுற்ற தமிழ் இசை வடிவங்களாகிய 103 பண்களில் 22 பண்களை மீட்டெடுத்தது. புத்திலக்கிய வடிவங்களை ஞானசம்பந்தர் படைத்தளித்தார். தாண்டகம் நாவரசர் கொடையாக அமைந்தது. கருவறையில் நிகழ்த்தப்படும் அருச்சனை என்பது "தமிழ் இசையால் பாடுவதே'' என்பதை சுந்தரர் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் புரட்சி செய்தார். உலகச் சமய இலக்கியங்களுள் நெஞ்சத்தை உருக வைக்கும் அனுபவ வெளிப்பாடாகத் திருவாசகத்தை மாணிக்கவாசகர் தமிழுக்குக் கொடையாக வழங்கினார். ஒன்பதாம் திருமுறை இசைப்பாமாலையாய் வந்தது. 11-ஆம் திருமுறையில் புத்திலக்கிய வடிவங்களில் 40 சிற்றிலக்கியங்கள் இணைந்தன.

வரலாற்றுப் பெட்டகமாக கடவுளினும் பெரியன் மனிதன் என்பதை நிலைநாட்டிச் சேக்கிழார் பெரிய புராணம் என்ற காப்பியம் உபகரித்தார்.

### சைவ சித்தாந்தம்

சைவம் தமிழ்மொழிக்குத் தந்த விலைமதிப்பற்ற கொடைகளுள் ஒன்று சைவ சித்தாந்தம். விவேகானந்தருக்கு அது, ஜே.எம். நல்லசாமி பிள்ளையால் மொழிபெயர்த்துத் தரப்பட்ட போது, அவரை அது வியக்க வைத்தது. மூவர் தேவாரம், திருமந்திரம் தந்த ஒளியில் மெய்க் கண்டார் படைத்த சிவஞான போதமும், அதற்கு சிவஞான யோகிகள் வரைந்த பேருரையும் அளவற்ற தமிழர்களின் நுண்மாண் நுழை புலனுக்குக் கட்டியம் கூறி நின்றன. இந்நூலுக்கு அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய செய்யுள் வடிவிலான உரை நூலே ,சிவஞான சித்தியார் என்பது. தமிழின் பெருமை பேசும் ஆறு நூல்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்பட்டது.

மெய்கண்ட சாத்திரங்களும்,பண்டார சாத்திரங்களும் தமிழ்மக்கள் கற்றுணர்ந்த வடமொழி மற்றும் தருக்க அறிவுக்குச் சான்று கூறுவன.

### சைவம் தந்த அறக்கொடைகள்

வள்ளுவத்தையும், பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஏனைய நூல்களையும் வழிமொழிந்து, சைவநெறி நின்ற ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்றோர் அரிய எளிய அறநூல்களைச் சைவத்தின் பெயரால் வடித்தமைத்தனர். கச்சியப்பரின் கந்தபுராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம், சிவஞான சுவாமிகளின் காஞ்சிப் புராணம், என்பன தமிழன்னைக்குச் சூட்டப்பெற்ற விலைமதிப்பற்ற ஆபரணங்கள். சிற்றிலக்கியம், தனிப்பாடல் வரிசையில் சித்தர்கள் ஆற்றிய பங்கும் மகத்தானது. ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பட்டினத்தார், தாயுமானார், சிவப்பிரகாசர், குமரகுருபரர், சைவத்திருமடத்து தலைவர்கள், அருளாளர்கள் வழங்கிய நூல் தொகுதிகள் கணக்கில் அடங்காதன.

### பல்வகை இலக்கியச் செல்வங்கள்

சிவநெறி வழாது நின்று முருகனைப் பாடுபொருளாகக் கொண்டு, சந்தத் தமிழ் தந்த அருணகிரியாரின் திருப்புகழ் ஓர் தமிழ் அற்புதம்.

முருகனை மையப் பொருளாக்கி வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் நெஞ்சுருக்கும் கவிமழை பொழிந்தனர். ஈழத்து அறிஞர்களின் சைவப்பணிகள் தனியே ஆராயத்தக்கன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிற்கால கம்பராகவே திகழ்ந்தார்.

சீர்காழி மூவராகிய முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாச்சலக் கவிராயர் என்பார் தமிழில் சிவனை மையப்படுத்தி இனிய பதங்களையும், கீர்த்தனைகளையும் வழங்கித் தமிழ் இசைக்கு ஆக்கம் சேர்த்தனர். கோபால கிருஷ்ணபாரதி, சுத்தானந்த பாரதி முதலியோரின் சைவப் பங்களிப்பும் குறிக்கத்தக்கன.

**செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை**

### விருப்பு - வெறுப்பற்ற ஆய்வு

இன்னும் சைவத் தமிழ் இலக்கியங்கள் படைத்த நூறு நூறு கவிஞர்களும், ஆயிரக் கணக்கான நூல்களும் தமிழன்னை செம்மொழி சிம்மாசனம் ஏறத்துணை நின்றன. அவற்றையெல்லாம் விரிப்பின் பெருகும். சைவம் வளர்த்த தமிழை ஒதுக்கிவிட்டுத் தமிழ்மொழியின் சீர்மையை நிலைநாட்ட முயல்வது நிரம்பாது.

விருப்பு, வெறுப்புகளை ஒதுக்கி வைத்து விட்டுத் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும், பல்துறை அறிஞர்களும் சைவ இலக்கியங்களை ஆய்ந்தால் அவை தரும் பெருமிதம் கடல் அளவுக்கும் மேல் என்பது புலனாகும். காலமாற்றங்களால் யாவும் சரியாக மதிப்பிடப்படவே செய்யும் என்று நாம் நம்பலாம்.

*தேவர் குறளும் திருநாள் மறை முடியும்*
*மூவர் தமிழும் முனிமொழியும் - கோவைத்*
*திருவாசகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவாசகம் என்று உணர்.*

### சைவத்தின் சமூகப் பெருமிதப் பதிவுகள்

சைவத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கீழே தரப்பட்டுள்ள அரிய தொடர்கள் இத்தகு நூல்களின் சமயங்கடந்த சமூக நாட்டத்தைப் பறைசாற்ற வல்லன.

செந்தமிழ் வாரிதி
முனைவர் இரா. செல்வகணபதி

''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'
''நாமார்க்கு குடியல்லோம் நமனை அஞ்சோம்'
''யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'
''எல்லாரும் இன்புற்றிருக்கனைப்பதுவே ஒரு கைப்பிடி' அல்லாமல்
வேறு ஒன்று அறியேன் பராபரமே'
"என் கடன் பணி செய்து கிடப்பதே'
"வான் முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க'
"சாத்திரம் பல பேசும் வழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்'
"பறைச்சி ஆவது ஏதுடா? பனத்தி ஆவது ஏதடா?
இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டு இருக்குதோ?'
"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'
"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

இத்தகு தொடர்களும், இவை போல்வன பலவும், சமயம் சார்ந்த பண்பாட்டில் செழித்த அரிய தமிழ்க் கொடைகள்.

(முற்றும்)

# ஒஸ்லோவில் தமிழ் குழுக்களுக்கு இடையில் மோதல் சம்பவம்

## அறுவர் காயம்;மூவர் கைது

(கொழும்பு)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் தமிழ் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று இலங்கைத் தமிழர்களை ஒஸ்லோ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மொத்தமாக ஆறு பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் ஒஸ்லோ உலவெல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெடியவன் மற்றும் சிவகணேஷ், வடிவேலு ஆகியோரும் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒஸ்லோ இந்து ஆலய விழாவொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# இலங்கை அகதிகள் முகாமில் அரிவாள் வெட்டு தாக்குதல்

சேலம் மாவட்டம் தம்மம் பட்டியை அடுத்த நாகியம்பட்டியில் இலங்கை அகதி முகாம் உள்ளது. இங்கு இலங்கை அகதிகள் குடும்பத்துடன் தங்கி உள்ளனர்.

இவர்களில் சிலர் அடிக்கடி வெளிநாடு சென்று வருவது உண்டு. பணம் அதிகம் வைத்திருக்கும் இவர்களிடம் மற்றவர்கள் அஞ்சி நடுங்கி இருந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு 15 பேர் கொச்சி வழியாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சி செய்தனர். அவர்களை கடற்படையினர் பிடித்து எச்சரித்து அனுப்பி விட்டனர்.

இந்த 15 பேரும் தாங்கள் பிடிபட அந்த அகதி முகாமை சேர்ந்த இன்னொரு தரப்பினர் தான் காரணம் என்று நினைத்து 15 பேர் கும்பலாக வந்து இன்னொரு தரப்பினரை தாக்கினார்கள்.

இதில் ஜேசுதாஸ் அவரது மனைவி மேரி ஜெனிதா மற்றும் சாமிபிள்ளை ஆகியோருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஜேசுதாசின் குழந்தை தர்ஷிகாவை அந்தக்கும்பல் தூக்கி வீசியது. இதில் தர்ஷிகாவும் காயம் அடைந்தார். இந்த மோதலைத் தொடர்ந்து அகதி முகாமில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. (6-2)

# போதைப்பொருள் கடத்தல் தொடர்பான முறைப்பாடுகளுக்கு விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

இலங்கையில் போதைப் பொருளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தகவல்களை வழங்குவதற்கு புதிய தொலைபேசி அழைப்பு இலக்கமான 1984 என்ற இலக்கத்துடன் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ள முடியும் என அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் கே.கமகே தெரிவித்துள்ளார்.

இதனூடாக தமக்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கமைய பாதுகாப்பு தரப்பினருக்கு தகவல்களை வழங்கி சட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த தொலைபேசி இலக்கத்தினூடாக போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்களை அதிலிருந்து மீட்பது பற்றி அவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)





அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க திட்ட முகாமையாளர் என் தமித் விஜயசிங்க டெனிஷ் , செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் திட்ட அலுவலர் எஸ்.திருநிறைச் செல்வன் , இலங்கை செஞ்சிலுவைச்சங்க தேசிய தலைமையக திட்ட அனர்த்த முகாமைத்துவ அலுவலர் கோதமி சந்தன மற்றும் மாணவர்களின் பெற்றோர் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# நெஞ்சுவலியை அலட்சியப்படுத்தாதீர்கள்!

சிலருக்குத் திடீரென்று நெஞ்சு வலி வரும். வேலை செய்யும்போது, பளு தூக்கும்போது, வேகமாக நடக்கும்போது, உணவு உண்ட பின்பு இப்படி அடிக்கடி வலி தோன்றும். அநேகம் பேர் இதை வாயுத் தொல்லை என்று அவர்களாகவே ஏதோ காரணங்களைக் கூறி அலட்சியம் செய்து விடுகின்றனர்.

பொதுவாக மார்பு வலி, மாரடைப்பு ஏற்பட பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக இருதயம் இயங்குவதற்கு பிராண வாயு தேவை. கரோனரி என்ற இரத்தக் குழாய் இருதயத்திறகு இரத்தத்தையும், பிராண வாயுவையும் கொடுக்கிறது. இந்த நிலையில் இதயத்துக்குத் தேவையான அளவு பிராண வாயு கிடைக்கவில்லை எனில் நெஞ்சுவலி ஏற்படும். அதே நேரத்தில் இரத்தக்குழாய் உட்சுவர்களில் கெட்ட கொழுப்பு முழுமையாக அடைத்தாலும் மாரடைப்பு வரும். இப்பிரச்சினை தற்காலத்தில் 20 வயது முதல் 70 வயதுள்ளவர்களுக்கு வருகிறது.



மார்பு வலி, மாரடைப்புக்குக் காரணமான கரோனரி இரத்தக் குழாயின் அடைப்பினைக் கண்டறிய பல பரிசோதனைகள் உள்ளன. இதில் மிகவும் முக்கியமான பரிசோதனை கரோனரி ஆஞ்சியோகிராம் (Coronary angiogram) என்ற உள் ஆராய்வு பரிசோதனை. இந்தப் பரிசோதனைதான் எல்லா மார்பு வலி, மாரடைப்பையும் கண்டறிய உதவுகிறது.

இந்தப் பரிசோதனையில் எந்தக் குழாயில் எவ்வளவு அடைப்பு என்ற விபரங்கள் தெரிந்துவிடும். இரத்தக்குழாயில் ஓர் அடைப்பா? அல்லது மூன்றா, நான்கா என்ற விபரங்கள் தெரிந்தபின்பு தான் பைபாஸ் அறுவை சிகிச்சையா? அல்லது பலூன் ஸ்டெண்ட் மூலம் அடைப்பினை நீக்கலாமா என்ற முடிவிற்கு வர முடியும்.

ஒன்றிரண்டு அடைப்பு இருந்து, இளைஞராக இருந்தால் சத்திரசிகிச்சையை தவிர்த்து பலூன் ஸ்டெண்ட் மூலம் இந்த அடைப்பினை நீக்கி விடலாம்.


இந்த சிகிசசை முறையில் பலூனின் மேல் பால் பொயிண்ட் பென்சில் ஸ்பிரிங் போன்ற ஸ்டெண்டை வைத்து இதை கரோனரி இரத்தக் குழாயின் உள்ளே செலுத்த வேண்டும். பின்னர் அடைப்பு உள்ள பகுதியில் இந்த ஸ்டெண்டை பொருத்திவிட்டு பலூனை வெளியே எடுத்து விட வேண்டும். இதுதான் பலூன் ஸ்டெண்ட் (Balloon stent) சிகிச்சை எனப்படுவது.

**டாக்டர் அர்த்தநாரி**

மேலும் தற்போது இந்தச் சிகிச்சை முறையில் பல அரிய மாற்றங்களும் வந்துள்ளன.

நெஞ்சு வலியை அலட்சியப்படுத்தாமல் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் பல நோய்களை மருந்து, மாத்திரைகள் மூலமே கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

## 'பந்து நோய்' தெரியுமா?



மனிதர்களுக்கு எண்ணற்ற வியாதிகள் ஏற்படுகின்றன. அவற்றில் சில விந்தையானவை. அப்படிப்பட்ட ஒன்றுதான் 'பந்து நோய்'. இந்நோய் ஏற்பட்டால் முதலில் முதுகின் மேற்புறத்தில் சதைப்பந்து போன்ற வளர்ச்சி ஒருவகை சுரப்பியால் ஏற்படுகிறது.

ஆங்கிலத்தில் இந்நோய் 'குஷிங்ஸ் சிண்ட்ரோம்' என்று அழைக்கப்படுகிறது. 'குளுக்கோகார்டிகாய்ட்ஸ்' என்ற அமிலம் அதிகமாக உற்பத்தியாவதால் இந்நோய் உண்டாகிறது. இந்த நோய் முற்ற முற்ற, முகம் வட்டமாகி கழுத்து தடித்துவிடும். கை, கால்கள் மெலிந்துவிடும். இந்நோய் ஏற்பட்டவர்கள் பந்துக்குக் கை, கால்கள் முளைத்தது போல் குச்சி குச்சியாய் இருப்பார்கள்.

## தயாரிப்பது எப்படி?


நிழலில் உலர்த்தப்பட்ட பப்பாளி இலையில் சுமார் 5 கிராம் முதல் 10 கிராம் வரை எடுத்துக் கொள்ளவும். அதை ஒரு கோப்பை வெந்நீரில் போட்டு 5 நிமிடங்களுக்கு நன்றாக ஊற விடவும். பின்னர் வடிகட்டி அந்த கஷாயத்தை நோயாளிகளுக்குக் குடிக்க கொடுக்கவும்.

இந்த சிகிச்சையினால் நோயாளியின் உடல் வெப்பநிலை தணியும். நாடித் துடிப்பின் வேகமும் குறையும்.

# இதய நோயாளிகளுக்கு பப்பாளி !

கடுமையான காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் பப்பாளி இலை கஷாயம் இதய நோயாளிகளுக்கும் நல்லது. முக்கியமாக அடிக்கடி இதயத் துடிப்பு அதிகரிப்பதால் அவதிப்படும் நோயாளிகளுக்கு பப்பாளி இலை கஷாயம் சிறந்த பலனளிக்கும்.

பப்பாளி இலை கஷாயம் நோயாளியை அமைதிப்படுத்தி, இதயத்துடிப்பைக் குறைத்து நிவாரணம் அளிக்கிறது. இதய நோயாளிகளுக்கு நன்றாக முற்றி பழுத்த பப்பாளிப் பழம் மிகச் சிறந்த உணவாகும்.



பப்பாளிப் பழம் இரத்தத்தில் கொலஸ்டிராலின் அளவைக் குறைத்து, இரத்தக் குழாய்களை நெகிழக் கூடியவையாக ஆக்குவதால், இதய நோயாளிகள் பப்பாளிப் பழத்தைத் தவறாமல் கண்டிப்பாக அவர்களுடைய உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

காலை உணவாக பப்பாளிப் பழத்தை மட்டுமே சாப்பிடலாம். மாலையில் தேநீர் வேளையிலும் பப்பாளிப் பழம் சாப்பிடலாம். ஆனால் இரவில் பப்பாளிப் பழம் சாப்பிடக் கூடாது.

# தண்ணீரே மருந்து..!

உடல் இளைப்பது முதல் புற்றுநோய் பாதிப்பு குறைவது வரை செலவே இல்லாத மருந்து ஒன்று இருக்கிறது தெரியுமா? அது தான் தண்ணீர். செலவே இல்லாத தண்ணீரின் மகிமை பற்றி நமக்கு தெரிந்தும் அலட்சியப்படுத்துவது தான் வேதனையான வேடிக்கை.

கொழும்பு போன்ற பெருநகரங்களில் வாழும் பெரும்பாலோர், தனியாரிடம் வாங்கி பருகும் 'மெனரல் வோட்டர்' தான் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் மெட்ரோ தண்ணீரை குடித்தாலே போதும், முக்கியமாக காய்ச்சிக் குடிக்க மறந்து விடக்கூடாது.

நாம் சாப்பிடும், குடிக்கும் எதுவாக இருந்தாலும், அதில் உள்ள நல்ல சத்துக்களை திரவமாகவும், திடமாகவும் பிரித்து பிரித்து வெளியேற வேண்டிய சமாச்சாரங்களை வெளியேற்றி, சத்துக்களை, திரவ வடிவில் ஏற்று



உடலின் பாகங்கள் பிரித்துக் கொள்கின்றன. இப்படித் தான் கல்சியம், இரும்பு, கார்போஹைட்ரேட் என்று எல்லாம் உடலில் சேர்கிறது.

உணவு சாப்பிடும் போது மட்டும் தண்ணீர் குடிப்நபது போதாது. தண்ணீர் குடிப்பதை பழக்கப்படுத்த வேண்டும். தண்ணீர் தொடர்பான பழங்கள், காய்கறிகளை அதிகம் சேர்க்க வேண்டும்.

என்ன தான் உடற்பயிற்சி செய்தாலும், டொனிக் சாப்பிட்டாலும், உடல் எடை குறையாது. ஆனால், தொடர்ந்து தண்ணீர் குடித்து வாருங்கள், ஒரு மாதத்திலேயே விளைவு தெரிந்து விடும். உடல் எடையை அதிகப்படுத்திக் காட்ட இளைஞர்கள், இன்டர்வியூவுக்கு செல்லுமுன் கண்டபடி தண்ணீர் குடித்துச் செல்வர். இது சரியல்ல. உண்மையில், உடல் எடையை கூட்டிக் காட்ட தண்ணீர் குடித்துச் செல்வர். இது சரியல்ல. உண்மையில், உடல் எடையை கூட்டிக் காட்ட தண்ணீர் பயன்படாது. உண்மையில், அது உடலை பாதிக்கும். தினமும் குறிப்பிட்ட அளவு சாப்பிட்டு வந்தால் உடல் எடை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் என்பது தான் உண்மை. ஒரு நாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை தண்ணீர் குடிக்கலாம்.




# இருமலும் தும்மலும் !



ஒருவர் இருமும்போது அல்லது தும்மும் போது அவரது சுவாசப் பாதையில் உள்ள நோய்க் கிருமிகள் வெகு வேகமாக வெளியே தள்ளப்படுகின்றன. மற்றவர்கள் சுவாசிக்கும் போது காற்றுடன் உட்செல்லும் இக்கிருமிகளால் அவர்களுக்கும் நோய்கள் பரவுகின்றன.

தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சளியைத் துப்பினால் அது புழுதியில் கலந்து விடுகிறது. அதில் நோய்க் கிருமிகள் இருக்கும். காற்றடிக்கும்போது புழுதியானது சுற்றிலும் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்தப் புழுதிக் காற்றைச் சுவாசிக்கும் மற்றவர்களுக்கும் அந்த நோய் பரவுகிறது. காசநோய், மணல்வாரி, சின்னம்மை, ஜலதோஷம், நிமோனியா, தொண்டை அடைப்பான் போன்ற நோய்கள் இவ்வாறு பரவுகின்றன.

தனிப்பட்ட முறையில் சுகாதாரம் காப்பதுடன், சுற்றுப்புறத்தையும் சுகாதாரமாக வைத்துக் கொள்வது, நம்மைச் சுற்றியுள்ளவர்களின் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது ஆகியவையே இம்மாதிரிப் பரவும் தொற்று நோய்களில் இருந்து தப்பிக்க வழி.

# இலங்கையில் புகையிரத போக்குவரத்துக்காக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)

புகையிரத போக்குவரத்துக்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ஒன்றிணைந்து இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதாக புகையிரத வணிக அத்தியட்சகர் விஜயசமரசிங்க குறிப்பிடுகிறார்.

இந்தத் திட்டத்தின்கீழ் முதற் கட்டமாக 5 புகையிரதங்களை இணைத்துக் கொள்ள வுள்ளதாக புகையிரத வணிக அத்தியட்சகர் கூறினார்.

இதனூடாக புகையிரதப் பணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்கமுடியுமென ரயில்வே வணிக அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்தார். (6-2)

# வடகிழக்கு மாகாணங்களிலுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க நடவடிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க வலுவான வேலைத்திட்டமொன்று அவசியமென பிரதமர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

மாகாணங்களிலுள்ள விகாரைகள் அதனை சூழவுள்ள தொல்லியல் முக்கியத்துவம்வாய்ந்த இடங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டங்களுக்கு அமைவாக அவற்றைப் பாதுகாக்க கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் கோரினார்.

இது தொடர்பாக பிரதமர் டி.எம். ஜயரட்ண 2600 அவது சம்பித ஜெயந்தி நடவடிக்கை குழுவிடம் எடுத்துக்காட்டியுள்ளார். (6-4)

# மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டது

(புத்தூர்)

அனுராதபுரம் நெத்சி சில அமைப்பினரின் ஏற்பாட்டில் கடந்த 5ஆம் திகதி புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத் தில் கிராம அலுவலர் ஈ. வைத்தியநாதன் தலைமையில் கண்பார்வை குறைந்தவர்களுக்கு கண் பரிசோதனை செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இங்கு 55 இற்கும் மேற்பட்டவர்கள் கண் பரிசோதனையை மேற்கொண்டதுடன் குறைந்த செலவில் தமக்கான மூக்குக் கண்ணாடியை பெற்றுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுபோன்ற நிகழ்வானது வலிகிழக்கு பிரதேச செயலரின் அனுசரணையுடன் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் காலக் கிரமத்தில் நடத்தப்பட்டு வருவது மக்களால் மிகவும் வரவேற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# முன்னாள் புலி உறுப்பினர்களில் 3 ஆயிரம் பேர் சொந்த இடங்களுக்கு

புனர்வாழ்வளிக்கப்பட்ட 3 ஆயிரத்திற்கும் அதிகமான முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் கர்ப்பிணித் தாய்மாரும் அடங்குவதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க குறிப்பிடுகிறார்.

தற்போது 12 தற்காலிக புனர்வாழ்வு முகாம்களில் மேலும் 8ஆயிரம் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தங்கியிருப்பதாக பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார். (6-2)

# யாழ். கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் மனைப்போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தால் கோட்டமட்டத்தில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**நல்லூர்க்கோட்டம்**

**தரம் 1**

த.சுவஸ்திகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாட), ர.அபிகா (யா/கோண்டாவில் இ.ம. வித்தி), வி.நித்தியரூபசர்மா (யா/இந்து ஆரம்ப பாட).

**தரம் 2**

யோ.சாரணி (யா/இந்து ஆரம்பப் பாட) , கே.சுஜிவா (யா/செட்டித்தெரு மெ.மி. வித்தி) , பு.மகிசனா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாட).

**தரம் 3**

சி.சிவாம்சன் (யா/இந்து ஆரம்ப பாட), கொ.வைஸ்ணவன் (யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க.பா), மூன்றாம் இடம் இருவர் செ.ஜீவிதன் (யா/திருநெல் வேலி றோ.க.த.க வித்தி), யோ.சந்தோஷ் (யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி

**தரம் 4**

தா.ஜீவசாந் (யா/இந்து ஆரம்ப பாட), உ.லுஸ்மினா (யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி, கு.பானுஜா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாட).

**தரம் 5**

ஜெ.சுவேதிகா (யா/இந்து மகளிர் ஆரம்ப பாட) , ஆ.அன்ரன் டெனிசன் (யா/நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தி), ர.பிரியந்தினி(யா/கோண்டாவில் றோ.க.த.க. பாட).

**கோப்பாய்க் கோட்டம்**

**தரம் 1**

ப.வைஷ்ணவி (யா/வாதரவூத்தை விக்னேஸ்வரா வித்தி), ஜெ.ரித்திகா (யா/கோப்பாய் நாவலர் வித்தி), ச.சஸ்மிதா (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி).

**தரம் 2**

சி.பிரணவி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி) , கி.தரணியா (யா/கோப்பாய் நாவ்லர் வித்தி) , இ.ஜெனனி (யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி).

**தரம் 3**

த.தனுஜா (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்) , ம.கலைநிலா (யா/நீர்வேலி றோ.க.த.க பாட), த.தக்ஷாயினி (யா/கோப்பாய் நாவலர் வித்தி).

**தரம் 4**

ஜெ.தரணிதரன் (யா/கோப்பாய் நாவலர் வித்தி) , ஜெ.வைஷ்ணவி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), கி.சஞ்சீவன் (யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

**தரம் 5**

ப.கிருஷானி (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), ச.நீபஜா (யா/கோப்பாய் நாவலர் வித்தி , வ.துஜேந்தன் (யா/சிறுப்பிட்டி இ.த.க பாட).

**யாழ்ப்பாணக் கோட்டம்**

**தரம் 1**

த.சாயகி (யா/சென்ஜோண் பொஸ்கோ வித்தி , தே.கிருத்திகா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) , மூன்றாமிடம் இருவர் ஆ.ஜாக்சன் (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) , கே.கபில்ராஜ் (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி).

**தரம் 2**

க.மதுமதி (யா/சென்ஜோண் பொஸ்கோ வித்தி), வி.பண்பொளி (யா/ சென் ஜோண்ஸ் கல்லூரி), கி.நிமல்ராஜ் (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி).

**தரம் 3**

உ.சுபிதன் (யா/சென்ஜோண் பொஸ்கோ வித்தி), ர.திலக்ஷா (யா/கொட்டடி நமச்சிவாய வித்தி), மூன்றாம் இடம் இருவர் றொ.வைஷ்ணவி (யா/பாசையூர் புனித அந்தோனியார் வித், பா.றகுதாஸ் (யா/சென் பற்றிக்ஸ் கல் லூரி).

**தரம் 4**

ர.தர்மிகா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) , ர.கிஷானாகற்லின் (யா/சென்ஜோண் பொஸ்கோ வித்தி , அ.அமலதாஸ் (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி)

**தரம் 5**

பா.அஞ்சுதன் (யா/நாவாந்துறை றோ.க வித்தி), பே.பிரியன்னா (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) , ஆ.பிரியங்கா (யா/கொழும்புத்துறை இ.ம.வி).

மேற்படி மாணவர்கள் 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.வலயக்கல்வி அலுவலகத் தில் நடைபெறும் வலயமட்டப் போட்டியில் பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (6)

# வீதி விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

பொத்துவில் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில் இ.போ.ச.வுக்குச் சொந்தமான பஸ் வண்டி ஒன்றும் மோட்டார் வண்டி ஒன்றும் மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர் . (6-2)

# கிராஞ்சிக் கிராமத்திலுள்ள குளங்கள் ஆழமாக்கும் பணி

பூநகரி பிரசேத்தில் உள்ள கிராஞ்சிக் கிராமத்தில் உள்ள விவசாயக் குழுவினரால் அப்பகுதிகளில் காணப்படும் குளங்கள் ஆழ மாக்கப்பட்டு வருகின்றது இக்குளங்களில் இருந்து பெறப்பட்ட மண் இப்பகுதியில் உள்ள உள்ளூர் வீதிகளில் காணப்படும் பள்ளங்களை செப்பனிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது இதற்காக பூநகரி பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள விவசாயக் குடும்பங்கள் வருமானம் பெற்று தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்றனர் என பூநகரி ஞானி மட விவசாயக் குழுத் தலைவர் நாகலிங்கம் கணேஸ் தெரிவித்துள்ளார் கடந்த யூலை மாதத்துடன் இவ் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இவ்வாறான வேலை திட்டங்களால் மக்கள் நன்மையடைவதுடன் பூநகரிப் பிரதேசமும் அபிவிருத்தி செய்யப் படும் என மேலும் தெரிவித்தார். (6-2)

# மனோகணேசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டால் அரசியலிலிருந்து விலகத் தயார்

## பிரபா கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மனோகணேசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டால் தாம் அரசியலிலிருந்து விலகத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற ஆசனம் வழங்கப்பட்டால் நாடாளுமன்ற பதவியை மட்டுமன்றி அரசியலிலிருந்தும் விலகிக் கொள்ளத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மை விடவும் மனோ கணேசன் மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றக் கூடியவர் எனவும் மனோ கணேசனுக்கு ஆசனம் வழங்கப்பட்டால் தமிழ் மக்களுக்கு அதிக நன்மை கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மனோகணேசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றை வழங்குவது குறித்து ஆராயும் நோக்கில் ரணில் விக்ரமசிங்க அவரை நேரில் சந்தித்துள்ளார்.

பிரபா கணேசன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தால், தேசியப் பட்டியல் ஆசனமொன்றை வழங்கத் தயார் என ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசனுக்கு தேசியப்பட்டியல் ஆச னமொன்றை வழங்குவது குறித்து இன்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் கூடி ஆராயவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு தமக்கும் அழைப்பு விடுக்கப் பட்டதாகவும் எனினும் தாம் இதில் பங்கேற்கவில்லை எனவும் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை விட்டு விலகி எதிர்க்கட்சிகளுடன் இணையப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# இலங்கையின் பொருளாதாரம் பெரும் பின்னடைவை சந்திக்கலாம்

## கலாநிதி ஹர்சா டி சில்வா எதிர்வுகூறல்

(கொழும்பு)

இலங்கையின் ஊழியர் சேமலாப நிதியம் கொழும்பு பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு சட்டவிரோதமான நடவடிக்கை என்பதுடன் இதனால் இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்திக்கலாம் என ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளியல் நிபுணருமான கலாநிதி ஹர்சா டி சில்வா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பு பங்குச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பானது பங்குச் சந்தையின் அடிப்படைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டது. பெரும் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்த சில நிறுவனங்களின் பங்குகளின் விலைகளும் திடீர் அதிகரிப்பைக் கண்டிருந்தன.

சில நிறுவனங்களின் பங்குகள் 300 வீத அதிகரிப்பையும் பெற்றுள்ளன. கொழும்புப் பங்குச் சந்தை தற்போது சூதாட்ட களமாக மாறியுள்ளது. இது நாட்டின் முழுமையான பொருளாதார பின்னடைவுக்கு வழிவகுக்கும்.

அமெரிக்காவிலும் பங்குச்சந்தை வீழ்ச்சி கண்டபோது அதன் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டிருந்தது. மத்திய வங்கி தானே வரையறுத்த முதலீட்டு விதிமுறைகளுக்கு மாறாக ஊழியர் சேமலாப நிதியப் பணத்தை பல தனியார் வங்கிகளில் முதலிட்டுள்ளதாகவும் பிரச்சினைகளை எதிர்கொண்ட செலான் வங்கியிலும் இப்பணம் முதலிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

இதயம் மட்டும் உறுதியாக இருந்தால்—சுண்டெலியால் கூட யானையைத் தூக்க முடியும்.
— திபெத்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## முதல்வர் கருணாநிதி கூறிய புத்திசாலித்தன அரசியலின் பொருள் என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பில் நடந்த அத்தனை விபரங்களையும் ஜூனியர் விகடன் விலாவாரியாக எழுதியிருந்தது. அதில் முக்கியமான ஒரு விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை இங்கு நோக்குதற்குரியது.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழக முதல்வர் கருணாநிதி 'புத்திசாலித்தனமாக அரசியல் நடத்துங்கள்' எனக் கூறியுள்ளார்.

அப்படியானால் இலங்கையில் தமிழ் அரசியல் தலைமைகள் புத்திசாலித்தனமாகச் செயற்படவில்லை என்பதைத் தமிழக முதல்வர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அதேநேரம் புத்திசாலித்தனமாக அரசியல் நடத்துங்கள் என முதல்வர் கருணாநிதி கூறியதற்குள் இருக்கக் கூடிய உட்பொருள் பற்றி நாம் ஆராய்வது மிகவும் அவசியமானதாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமது ஆதரவுக்கான விளக்கங்களைத் தென்பகுதி மக்களுக்குத் தெளிவுபடுத்தத் தவறியதால் சரத் பொன்சேகாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய ஆதரவுக்குத் தலைகால் வைத்து மகிந்த ராஜபக்ஷ தரப்புப் பிரசாரம் செய்தது.

இந்தப் பிரசாரம் சரத் பொன்சேகாவுக்குத் தென்பகுதியிலிருந்த ஆதரவையும் அடித்து உடைத்து அவரை படுதோல்விக்கு உட்படுத்தி விட்டது.

இது விடயத்தில் அரசியல் புத்திசாலித்தனம் இல்லை என்பது ஒரு கருத்து. இந்திய மத்திய அரசு உங்களை ஏமாற்றுகின்றது. இதனை நான் வெளிப்படையாகக் கூற முடியாது. நீங்கள் அதனை உணர்ந்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுங்கள் என்பது மற்றைய கருத்து.

இதைவிடத் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்று சேர வேண்டும். புத்திசாலித்தனமாக அரசியலை நகர்த்தக் கூடியவர்களை இணைக்க வேண்டும்.

வெறும் அறிக்கை விட்டு அரசியல் நடத்தினால் தோல்வியைத் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியாது என்பது அதில் இருக்கக் கூடிய பொதுக் கருத்து.

ஆகவே கலைஞர் கருணாநிதி கூறியதில் நிறைந்த அர்த்தம் உள்ளது. இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இலங்கை அரசு எங்களைப் பல்வகையில் துன்புறுத்துகின்றது. இவற்றையெல்லாம் மதிநுட்பமாக வெல்வதே ஒரே வழி. இதற்கான வியூகங்களை அமைப்பதில் எங்களிடம் இருக்கக் கூடிய துறைசார் விற்பன்னர்களை முன் நிறுத்த வேண்டும்.

அப்போதுதான் எங்கள் எதிர்காலம் ஆரோக்கியமானதாக அமையும். இது பற்றி நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமிழினத்தின் துன்பத்தை மனதில் நிறுத்தி விசுவாசமாக சிந்திக்க வேண்டும். இல்லையேல் நிலைமை மிக மோசமாவதை எவ்வகையிலும் தடுக்க—தவிர்க்க முடியாது போய்விடும்.

# முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கைக்கு விசேட குழு நியமனம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை விசேட நேர்முகப்பரீட்சை குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான சுற்று நிருபமும் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உரிய பாடசாலை அதிபரை தலைவராகக் கொண்ட இந்தக்குழுவில் ,பாடசாலையின் பிரதி அதிபர் ,ஆரம்ப பிரிவு தலைவர் ,பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி ஒவ்வொரு பிரதிநிதியும் அங்கம் வகிப்பார்கள்.

அனைத்து நேர்முகப்பரீட்சையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யவேண்டும். பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு என போலியான ஆவணங்களை தயாரிப்போருக்கு எதிராக இரகசிய பொலிஸாருடன் இணைந்து சட்ட ரீதியான நடவடிக்கை ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாணவர்களை பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ள அதிபர் ஒருவர் பணம் கோரினால் அது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்து முறைப்பாட்டுப்பிரதியின் பத்திரத்தின் பிரதியொன்றையும் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். இந்த விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அனைத்துப்பிள்ளைகளுக்கும் பாடசாலை ஒன்றை பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். என்று அவர் குறிப்பிட்டார்.

கல்வித்துறையை அரசியல் மயமாக்க ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினர். ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலம் தொடங்கியதுடன் கல்வித்துறையில் துரிதமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வசதிகள் சேவைகள் கட்டணம் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்புரிமைக்கான கட்டணம் என்பனவற்றுக்கு மேலதிகமாக நிதி அல்லது பொருள்களை பெற்றுக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

## சமூக இணையத்தளத்தால் ஒரு இலட்சம் கோடி இழப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் பணிபுரியும் ஊழியர்களில் அரைவாசிப் பேர் பேஸ்புக் டுவிட்டா மைஸ்பேஸ் யூசரியூப் உள்ளிட்ட சமூக இணையத்தளங்களை பார்ப்பதாக ஒரு ஆய்வு முடிபு தெரிவித்துள்ளது.

இதற்காக சுமார் 20 இலட்சம் ஊழியர்கள் அலுவலக நேரத்தில் தினமும் சராசரியாக ஒரு மணி நேரம் செலவிடுவதால் வேலை உற்பத்தி பாதிக்கப்படுவது தெரியவந்துள்ளது. இதனால் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கோடி இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சமூக இணையதளங்களை பார்ப்பதால் வேலை பாதிக்கப்படுகிறது. என ஆய்வில் பங்கேற்ற 14 சதவீதம் பேர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆனால் வேலைப்பளுவுக்கு நடுவில் இதுபோன்ற இணையதளங்களில் உலவுவதால் உற்சாகம் அடைந்து வேலையை குறித்த நேரத்தில் முடிக்க முடிவதாக 10 சதவீதம் பேர் தெரிவித்தனர். (2)

## மேசன் , தச்சு தொழிலுக்கான பரீட்சைப்பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

நிர்மாணம் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் (ICTAD) கடந்த பெப்ரவரிமாதம் 19ஆம் திகதி காலை 8.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடாத்தபட்ட மேசன், தச்சுதொழிலுக்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான செயன்முறைத் தேர்வில் பங்கு பற்றியவர்களுக்கான பரீட்சை முடிவுகளினை மாவட்டதிட்டமிடல் செயலக தொழில்துறை கண்காணிப்புப் பிரிவில் பார்வையிடலாம் என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (6)

இன்று செல்வச்சந்நிதியில் கொடியேற்றம்

"மண்ணிலே நீடு வாழ மன்றாடு"

எண்ணியது பலிக்கும்,
எழுதியாடி நடக்கும்,
கண்ணியமாய் நடந்தால்,
கால்களே வழி நடாத்தும்,
பண்ணியவை யாவுமே
படைத்தவன் கணிப்பான்
மண்ணிலே நீடு வாழ
மன்றாடு சந்நிதியில்!
கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## வடகிழக்கு விவசாயிகளுக்கு விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாயக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகள் தற்போது விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துவதாக அதன் தலைவர் சட்டத்தரணி சுமனா ஆரியதாச குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களாக விவசாயக் காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பெரிய வெங்காயச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் அதற்கான கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (6)

## இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளி,முல்லை மாவட்ட கிளைகளுக்கு புதிய நிர்வாக சபை தெரிவு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளைக்கு இடைக்கால நிர்வாக சபை நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டது.

இதற்கான தெரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளை அலுவலக மண்டபத்தில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தேசியத் தலைவரும் ஆளுநர் சபை உறுப்பினரும்,இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்ட கிளையின் செயலாளருமான கு.பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக,டாக்டர் ரி.குருகுல ராஜா ,செயலாளராக எஸ்.தருமரத்தினம்,பொருளாளராக பி.நித்தியானந்தன் குழு உறுப்பினர்களாக டாக்டர் ஆர்.சிவானந்தன் மற்றும் ரி. நாகேந்திரன் ஆகியோர் திரிவாகினர்.

மேலும்,முல்லைத்தீவு மாவட்டத்திற்கான இடைக்கால நிர்வாக சபையும் செய்யப்பட்டது. தலைவராக ,டாக்டர் கே. அகிலன் ,செயலாளர் எஸ்.மரியநாயகம், பொருளாளராக கே.உதயராஜாவும்,குழு உறுப்பினர்களாக கே.உதயராஜா மற்றும் வண பிதா ஐ.ராஜகுமார் ஆகியோர் தெரிவாகினர். (6-2-34)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### ஆசிமொழிகள்



சிரத்தை (அக்கறை) தான் நமக்குத் தேவை மனிதன் தன் நிலையிலிருந்து வளர்வதற்கும் தேய்வதற்கும் சிரத்தை தான் முக்கிய காரணமாக இருக்கிறது.

பலவீனத்திற்கான பரிகாரம் ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல மாறாக வலிமையை குறித்துச் சிந்திப்பதுதான் சுதந்திரமானவனாக இருங்கள் எவரிடத்தும் எந்தச் சிறு உதவியும் எதிர்பார்க்காதீர்கள்.

இல்லை என்று ஒரு போதும் சொல்லாதீர்கள் என்னால் முடியாது என்று சொல்லாதீர்கள் உண்மையில் நாம் வரம்பில்லா வலிமையும் ஆற்றலும் கொண்டவர்கள். சிங்கங்களே எழுந்து வாருங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள் அமரத்துவம் பெற்றவர்கள் நாம் அழியாத திருவருளைப் பெற்றவர்கள் சுயநலமற்ற தன்மையோடு பணிகளைச் செய்யுங்கள் எந்த இடத்திலும் வெற்றியை நிர்ணயிப்பது சுயநலமின்மையே . சுய நலம், சுயநலமின்மை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் போன்றது.

# சீனாவில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 127 பேர் பலி



(பீஜிங்)

சீனாவின் வடமேற்குப் பகுதியில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி 127 பேர் உயிரிழந்துள்ளனர்.

2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. திபெத் பகுதி உட்பட்ட கான்சூ மலை பிராந்தியத்தில் ஓடும் பாய்லாங் நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி கிராமங்களில் வெள்ளத்தினாலும் நிலச்சரிவுகளினாலும் பலர் பலியாகியுள்ளனர். நூற்றுக் கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடு உடைமைகளை இழந்துள்ளனர்.

கார்கள் கட்டட இடிபாடுகள், மரத்துண்டுகள் பாய்லாங் நதி வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு ஆங்காங்கே மலை போல் குவிந்துள்ளன. இதனால் நதிநீர் தடுக்கப்பட்டு ஊருக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. அப்பகுதிகளில் சீன இராணுவத்தினர் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தடைகளை அகற்றி வருகின் றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிக ளில் 3 ஆயிரம் இராணுவ வீரர்களும் 300 வைத்தியர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சீனப் பிரதமர் வென்ஜியாபோ நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கான்சூ பிராந்தியத்துக்கு விரைந்துள்ளார்.

இராணுவ வீரர்களும் பொலிஸாரும் மீட்புப் பணியில் முழுவீச்சில் ஈடுபடுமாறு சீன ஜனாதிபதி ஹூஜிந்தோவோ உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே சீனாவின் வடகிழக்குப் பகுதியிலும் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அங்குள்ள ஜீலின் பிராந்தியத்தில் 82 ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருப்பதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சனிக்கிழமையுடன் மழை ஓய்ந்து விட்டது. எனினும் பாய்லாங் நதியின் மலையோர நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை நீடிப்பதால் வெள்ள அபாயம் தொடர்கிறது. இவ்வாண்டில் மட்டும் சீனாவில் மழை வெள்ளத்தில் சிக்கி 2 ஆயிரத்து 100 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான ஜின்குவா தெரிவித்துள்ளது. (6-2)

# மணமகன் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் பலி

## துருக்கியில் சம்பவம்

துருக்கியில் மணமகன் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ.கே. 47 துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மணமகனின் மூன்று உறவினர்கள் பரிதாபமாக உயிரிழந்ததுடன் எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

தனது திருமண வைபவத்தில் கலந்து கொள்ள வந்த உறவினர்கள் மீதே குறித்த மணமகன் இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளார்.

தன்னியக்க துப்பாக்கியின் மூலம் வானத்தை நோக்கி சுட்ட போது கட்டுப்பாட்டை இழந்து உறவினர்கள் மீது அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் குறித்த மணமகனின் தந்தையும் இரண்டு அத்தைமாரும் உயிரிழந்துள் ளனர்.

திருமண வைபவத்தின் போது ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்வது அந்நாட்டு மக்களின் மரபாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (6-2)

# பேச்சுவார்த்தை நடத்த தயார்; தலிபான்கள் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ் பெற்றால் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தலிபான்கள் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்த பின் ஆட்சியை இழந்த தலிபான்கள் பாகிஸ்தான் எல்லையில் ஓடி ஒழித்தனர். பாகிஸ்தானின் பழங்குடிகள் வசிக்கும் பகுதியில் பதுங்கிக் கொண்டு அமெரிக்காவுக்கு எதிராகவும் பாகிஸ்தான் அரசுக்கு எதிராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

பாகிஸ்தானில் பெரும்பாலான தற்கொலை படை தாக்குதலுக்கு தலிபான்கள் காரணமாக உள்ளனர். எனவே இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி சில எதிர்க் கட்சியினர் வற்புறுத்தி வருகின்றனர்.

இது குறித்து அதிபர் சர்தாரி குறிப்பிட்டுகையில் ,

தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கதவுகள் திறந்தே இருக்கின்றன என்றார். இதற்கு தலிபானியர் தரப்பில் குறிப்பிடுகையில் வடமேற்கு மாகாணத்திலிருந்து இராணுவம் முற்றிலும் வாபஸ் பெற்றால் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

இராணுவ தரப்பில் இது குறித்து குறிப்பிடுகையில் ,

தலிபான்கள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் வரை அவர்களுடன் பேச்சு வார்த்தை கிடையாது என தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் உளவு அமைப்பின் முன்னாள் தலைவர் ஹமீத் குல் குறிப்பிடுகையில் தலிபான்களும் நம் மக்கள் தான் எதிரிகளால் அவர்கள் தவறாக வழி நடத்தப்படுகின்றனர். அவர்களுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தாவிட்டாலும் மத சபைகள் மூலம் பேச்சு வார்த்தை நடத்தி தற்கொலை படை தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரலாம் என்றார். (6-2)

# ஆந்திராவில் மழைக்கு 10 பேர் பலி; 400 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின

(நகரி)

ஆந்திராவில் உள்ள கரீம்நகர் ஸ்ரீகாகுளம் , விழியநகரம் , ஆதிலாபாத் , வாரங்கல் , மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி , கம்மம் , நிஜாமாபாத் ஆகிய 9 மாவட்டங்களில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கோதாவரி நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் 400 கிராமங்கள் மூழ்கியுள்ளன. ஒரு இலட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கன மழைக்கு 10 பேர் பலியாகியுள்ளனர் என்றும் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்ததாகவும் தெரியவருகிறது.

முதல்-மந்திரி ரோசையா மீட்பு பணிகளை விரைவு படுத்துமாறு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு 16 ஆயிரம் உணவு பொதிகள் 27 ஆயிரம் தண்ணீர் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

மழை வெள்ளத்தில் 30 ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் நாசம் அடைந்ததால் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது பற்றி அதிகாரிகள் பரிசீலித்து வருகிறார்கள். (6-2)

# கொலம்பியாவில் புதிய ஜனாதிபதியாக ஜூவான் சாண்டோஸ் பதவியேற்பு



தென்அமெரிக்க நாடான கொலம்பியா வில் புதிய ஜன ா திபதியாக ஜுவான் மனு வல் சாண்டோஸ் பதவியேற்றுள்ளார். 59 வயதான சாண்டோஸ் கொலம்பியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சராவார்.

அயல் நாடுகளான ஈக்குவடோர் மற்றும் வெனிசுலாவுடன் நல்லுறவுகளை ஏற்படுத் துவது தனது அரசாங்கத்தின் முன்னுரிமை விடயங்களாக இருக்கும் என கொலம்பிய ஜனாதிபதி சாண்டோஸ் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள வெனிசுலா ஜனா திபதி ஹியூகோ சாவேஸ் கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் சாண்டோஸை நேருக்கு நேர் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொலம்பியாவில் ஆயுதப் போராட்டம் நடத்திவரும் குழுக்களுடன் பேச்சுவார்த்தைக்கு நடத்தத் தயார் எனவும் ஆனால் அக்குழுக்கள் முதலில் வன்முறைகளைக் கைவிட வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார். (6-2)

# பாகிஸ்தான் ஜனாதிபதி மீது சப்பாத்து வீச்சு



(லண்டன்)

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை நோக்கி முதியவர் ஒருவர் தனது சப்பாத்துக்களை வீசினார். அத்தோடு சர்தாரியை நோக்கி மிஸ்டர் டென்பர்சென்ட் ஒழிக என கூட்டத் தினர் கோஷம் எழுப்பினர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதேவேளை இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என பாகிஸ்தான் அரசு மறுத்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தற்போது இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவருடன் மகன் பிலாவல், மகள் ஆசிபா ஆகியோரும் சென்றுள்ளனர். பிள்ளைகளுடன் சென்று இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூனை சர்தாரி சந்தித்தார்.

பாகிஸ்தானில் கடும் வெள்ளம் காரணமாக, மக்கள் அவதிப்படும் நேரத்தில் சர்தாரி வெளிநாட்டு சுற்றுப்பயணம் சென்றிருப்பதற்கு சில தரப்பினர் கண்டனம் தெரிவித்தனர். இந்நிலையில் பர்மிங்காமில் நடந்த கூட்டத்தில் இங்கிலாந்து வாழ் பாகிஸ்தான் மக்களிடம் அவர் பேசினார்.

அப்போது கூட்டத்தில் இருந்த ஷமீம்கான் என்ற முதியவர் திடீரென தனது இரு சப்பாத்துக்களையும் கழற்றி சர்தாரியை நோக்கி வீசினார். அவை சர்தாரியின் அருகில் விழுந்தன. அத்தோடு கூட்டத்தினர் மிஸ்டர் டென்பர் சென்ட் என எதிர்ப்புக் கோஷம் எழுப்பினர். எந்த அரசு ஒப்பந்தத்துக்கு அனுமதி கொடுத்தாலும் 10 சதவீதம் கமிஷன் வாங்கியதாக ஏற்கனவே அவர் மீது ஊழல் புகார் இருப்பதால் அவருக்கு மிஸ்டர் டென் பர்சென்ட் என பட்டப் பெயர் ஒன்று உள்ளது.

இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை உருவானது. அந்த நபரை பொலிஸார் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தினர் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவித்து வருகிறது என இங்கிலாந்து பிரதமர் கமரூன் பேசியிருந்தார்.

இந்த சூழ்நிலையில் அவரை சர்தாரி சந்தித்து பேசியதை எதிர்த்து இந்த சப்பாத்து வீச்சு நடந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (6-2)

# பொருளாதார வளர்ச்சியில் சீனா அபாரம்; ஜப்பானை பின்னுக்குத் தள்ளியது

(பீஜிங்)

சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி சீனா இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. பொருளாதார ரீதியாகவும் சரி இராணுவ ரீதியாகவும் சரி சர்வதேச அளவில் வல்லரசாக திகழ்கிறது அமெரிக்கா. அசைக்க முடியாத வளர்ச்சியுடன் பல ஆண்டுகளாக தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. பொருளாதார ரீதியாக செல்வாக்குடைய நாடுகளின் பட்டியலில் கடந்தாண்டு வரை ஜப்பான் இரண்டாம் இடத்தில் இருந்தது.

ஆனால் கடந்த சில மாதங்களாக சீனாவில் ஏற்பட்டுள்ள அபார பொருளாதார வளர்ச்சி காரணமாக ஜப்பானை பின்னுக்கு தள்ளி சீனா இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது.

கடந்தாண்டே பொருளாதார வளர்ச்சியில் ஜப் பானுக்கு சமமாக சீனா வளர்ச்சி அடைந்திருந்தது.

இருந்தாலும் இரண்டாம் இடத்தை பெற முடியவில்லை. இந்தாண்டு அதை சாதித்து காட்டியுள்ளது. சீனாவின் தலைமை நிதி கண்காணிப்பாளர் யி காங் இதைத் தெரிவித்தார்.

உலக வங்கி வெளியிட்டுள்ள மதிப்பீட்டின் படி பொருளாதார வளர்ச்சியில் இதே வேகத்தில் சென்றால் 2025 ஆம் ஆண்டில் அமெரிக்காவை முந்தி சீனா முதல் இடத்தை பிடித்து விடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக செல்வாக்கு பெற்ற நாடுகளின் வரிசையில் 2005 ஆம் ஆண்டில் மற்றும் பிரான்சை பின்னுக்குத் தள்ளியது சீனா. 2007 ஆம் ஆண்டில் ஜெர்மனியை முந்தியது. அதேபோல் சர்வதேச அளவிலான பொருளாதாரம் கொள்கைகளை வகுக்கும் ஜி-20 நாடுகளின் பட்டியலில் சீனா முக்கிய பங்கு வகிக்கிறது. (6-2)

# பிரயாணத்திற்கு இடையூறு விளைவிக்கும் வீதியில் நிறுத்தப்படும் வாகனங்கள்!

## கட்டுப்படுத்த யார் முன்வருவர்?



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்குள் வீதிகளில் மூலைமுடக்கெல்லாம் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பிரயாணத்திற்கு இடையூறான விதத்தில் வீதிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் கட்டடங்களுக்கான பொருள்கள் கொட்டப்படுவதும் வழமையாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது வீதிகளில் வாகனங்கள் நிறுத்தி ஆக்கிரமிக்கும் சம்பவங்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்து வீதிகள் பெரும்பாலும் அகலம் குறைந்த வீதிகளாகவே காணப்படுகின்றது. அவற்றில் முறையற்ற விதத்தில் பாரிய வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

சில இடங்களில் பல நாள்களாக வாகனங்கள் நிறுத்தப்படுவதினால் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். சில வேளை எதிர் எதிரேவரும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் நிலையும் காணப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணத்தில் கட்டிட வேலைகள் பெருமளவில் இடம்பெற்று வருகின்றன. கட்டிட வேலைக்காக பயன்படுத்தப்படும் மண் மற்றும் கற்களை வீதியின் குறுக்கே போட்டு வேலைகள் செய்கின்றனர்.

சிறிய வீதிகளில் மட்டுமல்ல; பெரியவீதிகளிலும் இவ்வாறான சம்வங்கள் நடைபெறுகின்றன. வீதிகளின் அரைவாசிக்கு கொட்டப்படும் கற்கள் பரவுண்டு வீதி முழுவதையும் ஆக்கிரமிப்பதனால் விபத்துக்களும் நேர்கின்றன.

இவற்றை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு எவரும் முன்வரவில்லை எனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க இயக்குநர் சபைத் தெரிவு

கிளிநொச்சி மத்தியகல்லூரியின் பாடசாலை கூட்டுறவு அபிவிருத்திச் சங்க புதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப்பட்டது. 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கூட்டறவு அபிவிருத்திச் சங்கத்தை மீள இயக்குவதற்கான கூட்டம் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றபோது இவ் இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டது.

இதில் பாடசாலை அதிபர் க.இரத்தினகுமார் தலைவராகவும் செயலாளர் மற்றும் பொருளாளராக கல்லூரியின் ஆசிரியர்களானமுறையே பா.ஜெகன், பி.சிவரூபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக கல்வி சாரா ஊழியர் இ.உதயராசா மற்றும் பாடசாலை மாணவர்களான ஜீவராசா, சி.நிரோசா, ஜெ.சுதர்சன் சா.அஜித்தா, மு.தனுசா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் இயக்குநர்சபைத் தெரிவில் கிளிநொச்சி மாவட்ட கூட்டறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஆர்.ரவீந்திரன், எஸ்.சஞ்சிவ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)


# நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்–2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகிறது.கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

01.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 11.08.2010 தொடக்கம் 25.08.2010 பி.ப.3.00 மணிவரை

02.கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 26.08.2010 ந.ப.12.00 மணிவரை.

03.கேள்வி திறக்கப்படும் திகதி 26.08.2010 பி.ப. 2.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)

04.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்கவேண்டும்.

06.கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

07.கேள்விப் பத்திரத்தின் ஒரு பகுதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும்.மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற்வரி | NBT | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | சபாபதி குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் | 11000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 08/C09 |
| 02 | பரமேஸ்வரா வீதி கல்லிட்டுத் தாரிடல் | 13000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 08/C09 |
| 03 | சம்பியன் குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடலும் 2-ம் தடவை தாரிடலும் | 3100.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |
| 04 | சீக்கோ வீதி கல்லிட்டுத் தாரிடல் | 7400.00 | 500.00 | 60.00 | 15.00 | M 09/C10 |
| 05 | அருளம்பலம் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 3450.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |
| 06 | பாலியார் கிணற்றடி வைரவர் கோவில் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 3000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |
| 07 | கருவப்புலம் குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் | 14300.00 | 500.00 | 60.00 | 15.00 | M 08/C09 |
| 08 | இராமலிங்கம் குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் | 4200.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |
| 09 | பலாலி குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் | 2700.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |
| 10 | நாவலடி வீதி கல்லிட்டுத் தாரிடலும் 2-ம் தடவை தாரிடலும் | 7000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 09/C10 |
| 11 | கொக்குவில் கொல்களம் திருத்தம் | 3300.00 | 500.00 | 60.00 | 15.00 | M 10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

திரு. மே. சாந்தசீலன்
செயலாளர், நல்லூர் பிரதேசசபை.
10. 08. 2010

(C-834)


# இலங்கையர் உட்பட 76 பேர் மெக்ஸிக்கோவில் மீட்பு


இலங்கையர் உட்பட 76 சட்டவிரோத குடியேற்றவாசிகள் மெக்ஸிக்கோவில் மீட்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

கொள்கலன் தாங்கி வாகனம் ஒன்றில் மறைந்திருந்து பயணம் செய்தபோதே இவர்கள் மெக்ஸிக்கோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள னர்.

மெக்ஸிக்கோ நாட்டில் தங்கியிருப்பதற்கான உரிய ஆவணங்கள் அற்ற நிலையிலேயே இவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக மெக்ஸிக்கோ அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

நீண்ட காலம் உணவு மற்றும் குடிநீர் இன்றி பயணம் செய்தமையினால் உடல் நீர் வறட்சி ஏற்பட்டு மோசமான நிலையில் அவர்கள் காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-3)

# இங்கிலாந்து வெற்றி பாகிஸ்தான் பரிதாபம்



(பிர்மிங்காம்)

சகல துறையிலும் ஜொலித்த இங்கிலாந்து அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தான் அணியை வீழ்த்தித் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 6 ஆம் திகதி பிர்மிங்காமில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 72 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 251 ஓட்டங்களை எடுத்து 179 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

அடுத்து 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 9 விக்கெட்டுக்களையிழந்து 291 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 4 ஆம்நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்ஸில் 296 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 118 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி நிர்ணயித்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 118 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித் தலைவர் ஸ்ரொரஸ், திரோட் ஆகியோர் தலா 53 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்துஅணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

**விடுமுறைக்கால கணனி வகுப்புக்கள்**

ஆரம்பம் - 12.08.2010, 14.08.2010

Certificate in Kids Programme
Certificate in Internet & E-Mail
Certificate in Adobe Photoshop
Diploma in Microsoft Office
Diploma in Office Management
Diploma in Desk Top Publising (DTP)
Diploma in Computer Hardware Engineering

ICT, GIT வகுப்புக்கள் மாதம்- 250/=

**Micro System** Development Centre
Jaffna road, Manipay.
T.P : 021 321 5462 , 077 2487082 (2132)


## முன்னாள் போராளிகள் பரீட்சைக்குத் தோற்றினர்

(வவுனியா)

இலங்கையில் நாடாளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகியுள்ள கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கு இராணுவத்திடம் சரண டைந்த விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந் தவர்கள் என தெரிவிக்கப்படுகின்ற 395 பேர் தோற்றுகின்றனர். (ச-5)

## ஐ.தே.கட்சியின் 15 எம்.பிக்...

ஐக்கிய தேசியக் கட்சியின் மேலும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் துடன் இணைந்துகொள்ளவுள்ளதாக அமைச் சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு சீர் திருத்தம் ஒன் றை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி எதிர்க்கட் சித் தலைவருடன் பேச்சு நடத்திவருகிறார்.

எனினும் எதிர்க்கட்சித் தலைவர் அந்த விடயத்தில் காலதாமதத்தை ஏற்படுத்திவருவ தாக குறிப்பிட்டார்.

இந்தநிலை தொடருமாக இருந்தால் குறித்த 15 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்களையும் இணைத்துக்கொண்டு மூன் றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை அரசாங் கம் நிறைவேற்றும் என ராஜித சேனாரத்ன எச் சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரை அரசாங்கத் துக்குள் இணைத்துக் கொள்வதற்கான அவ சியமோ தேவையோ இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமடையுமா னால் தீவிரவாதக் கட்சிகள் முன்னிலைக்கு வந்துவிடும் என்ற ஆபத்தை ஜனாதிபதி உணர்ந் துள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை நிலைமை உணர்ந்து செயற்பட வேண்டுமென அமைச்சர் ராஜித கேட்டுக் கொண்டுள்ளார். (ச-2,5)

# மரண அறிவித்தல்

## குணரத்தினம் குகவதி

அல்வாய் வடக்கு ஆவரம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நாயன் மார்க்கட்டு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் குகவதி 09.08.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் குணரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசன் மற்றும் மகேசன், செல்வநாயகம், குணவதி,விமலாவதி,கதிரவேலு,கமலா தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணசீலன்,அனுரா, கௌசல்யா,குக நேசன்,லக்மணஸ்ரீ(கண்ணன்),ரமணன், ஜீவிதா (ராஜி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பேபி, சற்குணதாஸ்,வனிதா,உமாசங்கர்,அகல்யா,சுகந்தினி ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/66, வைத்தியசாலை முன் வீதி,
நாயன்மார்கட்டு ,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## அரசாங்கத்திலிருந்து வெளி...

பிரபா கணேசன் எம்.பிக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள கடிதத்தில் இந்த அரசாங்கம் நாடாளு மன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான் மை பெறும் வகையில் வாக்களிப்பு உட்பட எந்த விதநடவடிக்கையிலும் பிரபா கணேசன் கலந் துக் கொள்ளக் கூடாது என்றும் தற்சமயம் பிரபா கணேனின் கட்சியின் அங்கத்துவம் ஜனநாயக மக்கள் முன்னணியில் இடைநிறுத்தம் செய் யப்பட்டுள்ளது என்றும் அவருக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தலைவர் மனோ கணேசனினால் பொதுச் செய லாளரின் தலைமையில் பத்து அரசியல் குழு உறுப்பினர்கள் அடங்கிய ஒழுக்காற்றுக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதிகார பூர்வ மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபா கணேசன் எம்.பி. தொடர்பிலான ஒழுக்காற்றுக் குழுவிலே பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன், மாகாணசபை உறுப்பினர்கள் எஸ்.இராஜேந்திரன், முரளி ரகுநாதன், கங்கைவேணியன், ஏ.ஜெயபா லன், ஜோசப் ஜேகப், எப்.எம்.ஷியாம், வி.முரளி தரன், லே.பாரதிதாசன் மற்றும் என் ராஜ்குமார் ஆகியோர் தலைவர் மனோ கணேசனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கட்சியின் தலைவரினா லும் பொதுச் செயலாளரினாலும் எடுக்கப்பட் டுள்ள இம் முடிவுகளை அங்கீகரிப்பதாகவும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதாகவும் ஜனநாயக மக்கள் முன் னணியின் அரசியல் குழுவின் அவசரக் கூட் டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கட்சித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கட்சி தலைமையகத்தில் நடை பெறவிருக்கின்றது.

இதற்கான அழைப்பு அனைத்து அரசியல் குழு உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்டுள் ளது என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத் துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-3)

## விலகப் போவ...

கடிதம் கிடைத்துள்ளதாக பிரபா கணேசன் கூறி னார்.

எனினும் இது தன்னுடைய முடிபில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை எனவும் அரசாங்கத்துடன் இணைந்தமைக் கான காரணங்களை உள்ளடக்கிய விளக்க மளிப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

தான் ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்துவிலகவில்லைஎனவும்தானேதொடர்ந்து அக்கட்சியில்தேசிய அமைப்பாளராகவுள்ளதாக வும் பிரபா கணேசன் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி முத்தையா (அப்பா)

### (முகாமையாளர் - ஈஸ்வரபகவான் அன் கம்பனி)



நயினாதீவு 7 ஆம் வட்டாரத் தை பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத் தையா அவர்கள் 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாக முத்து தம்பதிகளின் அன்பு மகனாரும், முருகேசு தங்க முத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும், சண்முகவடிவு, கற் பகவடிவு, கிருஸ்ணவடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வி.ஆர்.கே. இரத்தினசபாபதி (ஜே.பி), சிவானந்தராஜா, அன்னலிங்கம் சுரேந்திரராஜா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனும். ஓம்சக்தி, யசோதன், ஆதித்தன், ஆதி சக்தி, சிவசக்தி, சுதாகரன், மணிகண்டன், ஞானசக்தி, விஜிதா, கோகுலன், தர்ஷன், விஜயன், மயூரன், பிரியதர்சினி, திபா கரன், மதுரவாணி, காந்தரூபன், சாந்தரூபன், கோமேசன், மேரிசுமா, பிரவீனா, வராகி, வாசுகி, விபூஷன், சாள்ஸ் நிக்ஷன், டெய்சி ஆகியோரின் அன்புப்பேரனும் நிலாந்தி, புர்ரதனி, பிரணவிகா, சஞ்ஜய், ரிவாஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (10.08.2010) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம் பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

532/1, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
021 222 5919.

தகவல்
குடும்பத்தினர்

(2126)

## விடுதலைப் புலிகளின்...

அமைச்சு தீர்மானிக்கும் என இராணுவ ஊடகப்பிரிவைச் சேர்ந்த கேணல் துமிந்த கமேகே தெரிவித்துள்ளார். பயன்படுத்தப்படக் கூடிய நிலையிலுள்ள ஆயுதங்கள் இராணுவத்தினருக்கு வழங் கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 3 வகையானவை இருந்தன. பயன்படுத்தப்படக் கூடியவை, சிறு சேதங்கள் கொண்டவை மற்றும் காலாவதியானவை.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை நாம் மத் திய ஆயுதக் களஞ் சியத்திற்கு அனுப்புவோம். அவர்கள் எவற்றை வைத்துக்கொள்ள வேண் டும் எவற்றை அழித்துவிட வேண்டும் என் பதை அவர்கள் தீர்மானிப்பார்கள் என கேணல் கமமே கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் புலிகளால் ஒளித்து வைக்கப்பட்டிருந்த லட்சக் கணக்கான ஆயுதங்களை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இதே வேளை நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி இரணைமடுவிலும் முள்ளிய வளையிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது 60 மி.மீ. மோட்டார் குண்டுகள் உட்பட பெருந்தொகை ஆயுதங் களை படையினர் கைப்பற்றியுள்ளனர். (ச-5)

## காணாமல் போன புலி...

சரணடைந்த பின்னர் கொலை செய்யப்பட்ட தாக சிலதகவல்கள் தெரிவிப்பதுடன் அவர்கள் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருக்கலாம் என மேலும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இவர்கள் உயிருடன் இருக்கின்றனரா அல்லது கொல் லப்பட்டு விட்டனரா என்ற குழப்பம் நிலவுகிறது.

இந்த நிலையில் சிறை வைக்கப்பட்டிருந்தால் அல்லது மறை முகமாக வைக்கப்பட்டிருந்தால் அவர்களை ஆஜர்ப்படுத்துமாறு கோரி உறவினர்கள் இந்த மனுவை தாக்கல் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த மனு வவுனியா அல்லது யாழ்ப்பா ணம் மேல் நீதி மன்றத் தில் தாக்கல் செய்யப்படலாம் எனவும் தெரியவருகிறது.

சில மனிதநேய அமைப்புக்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய உறவினர்களுக்கு உதவியளிக்க உள்ளன. அதேவேளை 1996-1997 மற்றும் 2002ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாறு காணாமல் போனவர்கள் அல் லது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கோரி ஆயிரக்கணக் கான மனுக்கள் வவுனியா மற்றும் யாழ். மேல் நீதிமன்றங்களில் உறவினர்களினால் தாக்கல் செய்யப்பட்டி ருந்ததாகவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-5)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் வலம்புரியில் நாளை 11.08.2010 (புதன்கிழமை) முதல் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் கலாநிதி

**க.குணராசா (செங்கை ஆழியான்)**

எழுதும்

**ஈழத்தவர் வரலாறு**

வாசிக்கத் தவறாதீர்கள்.


## எம்பியாக்க...

வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவிடம் மனோகணேசன் இச்சந்திப்பின்போது பிரதான மாக் கோரியிருக் கின்றார். ஆயினும் அங்கு இப்பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானத்தை ஊட கங்களுக்கு தெரிவிக்க அவர் மறுத்துள்ளார்.

இதேநேரம் அரசுடன் சேர்ந்திருக்கும் பிரபா கணேசன் எம்.பி. இவ்விடயத்தில் கட்சி இன்று இறுதி முடிபை எடுத்து விடும் என்று அவர் ஊட கங்களுக்கு தெரிவித்துள்ளார். (ச-3)

## ஐக்கிய தேசி...

மங்கள சமரவீர ஐ.தே.கவில் இணையும் போதே விடுக்கப்பட்டது. ஜெனரலுக்கு தனிப் பட்ட ரீதியில் எந்தவொரு ஐ.தே.க. உறுப்பின ரும் அழைப்பு விடுக்கவில்லை என்றார் ஹேரத்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு தனிப் பட்ட ரீதியில் ஐ.தே.கவில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் எவ்வாறான தீர்மானம் எடுப்பார் என விஜித ஹேரத்திடம் வினவியதற்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப் பட்டாலும் அது தொடர்பில் கவனம் செலுத் தப்படமாட்டாது என்றார்.

ஐக்கிய தேசிய கட்சியில் சரத் பொன்சேகா இணைந்துகொள்வார்என்னும்செய்தியில்எந்த வித உண்மையும் இல்லை எனவும் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரி வித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.க வில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர இணைந்து கொண்ட போது நிகழ்வில், ஜெனரல் சரத் பொன்சேகாவையும் ஐ.தே.கவில் இணையுமாறு கரு ஜெய சூரிய பகிரங்க அழைப்பு விடுத்தார்.

நல்லாட்சியை உருவாக்குவதற் காக அனைத்து கட்சிகளும் ஒன்றி ணைய வேண்டுமென இதன்போது கரு ஜெயசூரிய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.